# சுபீட்சம்

SUPEEDSAM – EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 11.07.2023 supeedsam.com supeedsam@gmail.com


# மன்னம்பிட்டி பஸ் விபத்து; 12 பேர் பலி: 40 பேர் படுகாயம்





## மனம்பிட்டிய பேருந்து விபத்து : இதற்கு முன்னரும் தண்டிக்கப்பட்ட சாரதி

பொலன்னறுவை மானம்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற பேருந்து விபத்து தொடர்பில் கைது செய்யப்பட்ட பேருந்து சாரதி, ஆபத்தான முறையில் வாகனம் செலுத்தியமைக்காக இதற்கு முன்னரும் பொலன்னறுவை தலைமையக பொலிஸாரால் தண்டிக்கப்பட்டுள்ளதாக

02 ஆம் பக்கத்தில்...

(கனகராசா சரவணன்)

பொலன்னறுவை கதுருவெல பிரதேசத்தில் இருந்து கல்முனை வரையிலான பயணிகள் போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த தனியார் பஸ்வண்டி மன்னம்பிட்டி கொட்டலி பாலத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு வேககட்டுப்பாட்டை மீறி

02 ஆம் பக்கத்தில்...

## மனம்பிட்டிய பேருந்து விபத்து : 3 வருடங்களுக்கு முன் முகநூலில் பகிரப்பட்ட பதிவு

பொலன்னறுவையில் இருந்து காத்தான்குடி நோக்கிப் வேகமாக பயணித்த பேருந்து ஒன்று விபத்துக்குள்ளானது தொடர்பில் மூன்று வருடங்களுக்கு முன்னர் குறித்த பேருந்தின் வேகம் தொடர்பில் அதில் பயணித்த பயணி ஒருவர் அதிருப்தி தெரிவித்து தனது முகநூல் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவானது தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றது.

பொலன்னறுவையில் இருந்து காத்தான்குடி நோக்கிப் பயணித்த பேருந்தொன்று மன்னம்பிட்டி கொட்டாலிய பாலத்தில் மோதி ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 11 பேர் உயிரிழந்தனர்.

02 ஆம் பக்கத்தில்...

## ஜனாதிபதியின் கழுகுப்பார்வைக்குள் மட்டக்களப்பு மாவட்ட ஆளும் கட்சி உறுப்பினர்கள்?




ஜனாதிபதியின் கழுகுப்பார்வைக்குள் மட்டக்களப்பு மாவட்ட ஆளும் கட்சி உறுப்பினர்கள் உட்படுத்தப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அடிக்கடி தனிப்பட்ட விஜயங்களை மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டக்களப்பு மாவட்ட அரசியல்

02 ஆம் பக்கத்தில்...

## செப்டம்பர் மாதம் மிகப் பேரிய பொருளாதார நெருக்கடி உருவாகும்

எதிர்வரும் செப்டம்பர் மாதம் கட்டாயம் நாட்டில் மிகப் பெரிய பொருளாதார நெருக்கடி உருவாகும் என ஐக்கிய குடியரசு கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற

02 ஆம் பக்கத்தில்...

## கருணாநிதியின் நூற்றாண்டு விழா கிழக்கு மாகாணத்தில் நடத்துவது பொருத்தமில்லை!

தமிழ்நாட்டு முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு நூற்றாண்டுவிழா நடத்த கிழக்கு மாகாணம் பொருத்தமில்லை என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழ் அரசுக்கட்சி ஊடக செயலாளருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

அது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்;

தமிழ்நாட்டு முதல்வர் அமரர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் நூற்றாண்டுவிழா இந்தியாவில் தமிழ்நாடு முழுவதும் தற்போது இடம்பெறுவதற்கான முன் ஆயத்தங்கள் இடம்பெற்று வருகிறது அவர் பிறந்த நாட்டில் அவர் ஆட்சிசெய்த தமிழ்நாட்டில் கட்டாயம் அந்த மக்கள் செய்வது நல்லது.

02 ஆம் பக்கத்தில்...



## பொருளாதார நெருக்கடி இலங்கை மக்களைப் பாதிக்கவில்லை



இலங்கை மக்களுக்கே உரிய மிக கடினமான நெருக்கடிகளில் இருந்து மீளும் திறன் காரணமாக கடந்த வருடத்தின் பொருளாதார நெருக்கடி இலங்கையின் முதுகெலும்பை முறிக்கவில்லை என நோர்வேயின் முன்னாள்

02 ஆம் பக்கத்தில்...


"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO

Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302

Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com

finma :34598 25605: cicero





MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலைமனைத்தும் பேறெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# திருக்கோவில் மண்டானை கிராமத்தில் வீடற்ற ஐந்து குடும்பங்களுக்கு புதிய வீடுகள் கையளிப்பு

(திருக்கோவில் நிருபர்-எஸ்.கார்த்திகேசு)

அம்பாரை திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட திருக்கோவில் 04 கிராம சேவையாளர் பிரிவில் சுனாமி மீள்குடியேற்ற கிராமமான மண்டானைக் கிராமத்தில் காணி மற்றும் வீடு இல்லாது வாழ்ந்து வந்த ஐந்து குடும்பங்களுக்கு கனடா சீடர்ஸ் நிருவனத்தினால் புதிய வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வானது கனடா நாட்டை தளமாகக் கொண்டு இயங்கி வரும் சீடர்ஸ் சமூக மேம்பாட்டு அமைப்பின் ஒழுங்கமைப்பில் மண்டானை கிராமத்தில் புதிய வீடுகள் கையளிக்கும் நிகழ்வு இன்று காலை இடம்பெற்று

இவ் வீடுகள் தலா 13 இலட்சம் பெறுமதியான நிதியுதவியுடன் நிர்மாணித்தக் கொண்டுக்கப்பட்டுள்ளதுடன் கனடாவில் வாழும் புலம்பேர் தமிழ் மக்களின் நிதி பங்களிப்புடன் இவ் ஐந்த வீடுகளும் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் கலந்து கொண்டு பயனாளிகளிடம் வீடுகளை கையளித்து இருந்ததுடன் நிகழ்வில் திருக்கோவில் உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன் கனடா சீடர்ஸ் அமைப்பின் பிரதிநிதி திருமதி சுபாஜினி கிரிதரன் சமுக செயற்பாட்டாளர் எஸ்.நந்தகுமார் கிராம சேவை உத்தியோகத்தர் எஸ்.சடாச்சரம் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.முரளிதரன் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.

## பொருளாதார நெருக்கடி இலங்கை மக்களைப்...

அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இணையவழி நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் கடந்த வருடம் அசாதாரண பொருளாதார நெருக்கடி ஏற்பட்டவேளை அது இலங்கை மக்களின் முதுகெலும்பை முறிக்கும் என பலர் நினைத்தனர் என எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கை மக்களிற்கே உரிய நெருக்கடியிலிருந்து மீளும் திறன் காரணமாக இது சாத்தியமாகவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதன்காரணமாக இலங்கையால் அந்த நெருக்கடியிலிருந்து மீண்டு முன்னோக்கி செல்வது குறித்து சிந்திக்க முடிகின்றது எனவும் தற்போதைய சூழ்நிலையை உருவாகுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினதும் ஏனையவர்களினதும் தலைமைத்துவமே காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த அற்புதமான தீவுக்கான மகத்தான வாய்ப்புகளை ஆராயும் தருணம் தற்போது வந்துள்ளது என்றும் மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி துறை மற்றும் சுற்றுலாத்துறை ஆகியன அதிக திறன் கொண்ட துறைகளாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## செப்டம்பர் மாதம் மிகப் பெரிய பொருளாதார

உறுப்பினருமன பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இணையத்தள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை கூறியுள்ளார்.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு நடைமுறைப்படுத்தப்படுவதன் ஊடாக இந்த பொருளாதார நெருக்கடி உருவாகும்.

வெளிநாட்டு கடனை திரும்ப செலுத்துவது ஆரம்பிக்கப்படும்.

வெளிநாட்டு கடன் திரும்ப செலுத்தப்படுவது நிறுத்தப்பட்டுள்ளதன் காரணமாக மீதமாகியுள்ள அந்நிய செலாவணியை பயன்படுத்தியே அரசாங்கம் அத்தியவசிய உணவு பொருட்கள் உள்ளிட்டவற்றை இறக்குமதி செய்து வருகிறது.

நாட்டில் காணப்படும் தற்போதைய நிலைமையானது தற்காலிகமானது, செப்டம்பர் மாதத்திற்கு பின்னர் அத்தியவசிய பொருட்களின் விலைகள் அதிகரிக்கலாம். அதேவேளை நான் ஜனாதிபதியாக பதவி வருவது குறித்து சிலர் அச்சத்திற்கு உள்ளாகி இருக்கின்றனர். நான் ஜனாதிபதியாக பதவி வருவதற்கு தகுதியில்லை என்பதற்கான காரணங்களை எவரும் இதுவரை முன்வைக்கவில்லை.

ஊழல் அரச அதிகாரிகள், மோசடியான வியாபாரிகள், மோசடியான குடும்ப ஆட்சியாளர்கள் நான் ஜனாதிபதியாக பதவி வருவதை விரும்பவில்லை என்பதுடன் நான் அந்த பதவிக்கு வந்தால் தமக்கு என்ன நடக்குமோ என்று அச்சப்படுகின்றனர் எனவும் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியின் கழுகுப்பார்வைக்குள்

நிலவரங்களை கேட்டறிவதுடன் ஆளும் கட்சி அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளையும் உன்னிப்பாக அவதானித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடந்த 8, 9 இரு தினங்கள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உத்தியோகப்பற்றற்ற விஜயமொன்றினை செய்து இருந்தார்.

குறிப்பிட்ட விஜயத்தின்போது தமிழ் உணர்வாளர் அமைப்பு தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் உட்பட பலப பிரமுகர்களையும் சந்தித்தார்.

இச்சந்திப்பின் போது கித்துள் - உறுகாமம் நீர்ப்பாசன திட்டம் விவசாயிகள் பிரச்சினை முக்கியமாக பேசப்பட்டுள்ளது. கிழக்கு பல்கலைக்கழகத்திற்கும் செங்கலடி மத்திய கல்லூரியின் 149 வருட நிறைவு விழாவிற்கும் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.. இச்சந்திப்பில் மாவட்ட விவசாய அமைப்பு தலைவர் ரமேஷ், நீர்ப்பாசன திட்ட முகாமைத்துவ முன்னாள் பணிப்பாளர் மோகன்ராஜ், கிழக்கு பல்கலைகழக பதிவாளர் பகிரதன் செங்கலடி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கசெயலாளர் மோ.டிலான் மற்றும் கமலதாஸ் ஆகியோரும் ஜனாதிபதியுடானசந்திப்பில் கலந்து கொண்டனர்.

## மனம்பிட்டிய பேருந்து விபத்து :






மேலும் 40 க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்த நிலையில் மனம்பிட்டிய மற்றும் பொலன்னறுவை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த விபத்து இடம்பெறுவதற்கு மூன்று வருடங்களுக்கு முன்னர் அந்த பேருந்தில் பயணித்த பயணி ஒருவர்

குறித்த பேருந்தானது பயணிகளின் உயிரைக் கருத்தில் கொள்ளாது மிகவும் வேகமாகப் பயணிப்பதாகவும், எதிர் திசையில் வாகனம் வந்தாலும் அவற்றுக்கு இடம்கொடுக்காமல் முந்திச்செல்வதாகவும், எனவே விரைவில் மக்களின் உயிரை அப்பேருந்தானது காவுவாங்கப்போகின்றது என குறிப்பிட்டு தனது முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த பதிவானது தற்போது இணையத்தில் வைரலாக பரவிவருகிறது.

பேருந்தின் சாரதி மற்றும் நடத்துனர் வேகக்கட்டுப்பாட்டை கருத்தில் கொண்டிருந்தாலோ அல்லது அப்பேருந்தின் சாரதி மீது அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்திருந்தாலோ இக்கொடூர சம்பவம் இடம்பெற்றிருக்காது எனப் பலரும் கவலை தெரிவித்து வருகின்றனர்.

# மட்டக்களப்பு, வாகரை, மாங்கேணி கடற்கரைப் பிரதேசம் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் ஹேலீஸ் விவசாய நிறுவனத்தினால் சுத்தம்

(ஏறாவூர் நிருபர் - நாஸர்)







உலகலாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் 'பூச்சியம் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக்' திட்டத்திற்கு இணைவாக அரசாங்கத்தினால் பல்வேறு செயல் திட்டங்கள் அமுல்செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் உல்லாசப்பயணத்துறையினை ஊக்குவிக்கும் திட்டத்தினையும் அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளது.

இத்திட்டங்களுக்கு ஆதரவளிக்குமுகமாக மட்டக்களப்பு- வாகரை - மாங்கேணி கடற்கரைப்பிரதேசம் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் ஹேலீஸ் விவசாய நிறுவனத்தினால் சுத்தம் செய்யப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஏகே. பத்தேகம தலைமையில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் நிறைவேற்று அதிகாரி எஸ்கே என்எப். சிறிவர்தன மற்றும் ஊழியர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

மாங்கேணி பிரதேச கடற்கரையின் சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரம் இதன்போது சுத்தம் செய்யப்பட்டது.

இதன்போது சுமார் ஐந்து தொன் எடையுள்ள பிளாஸ்டிக் மற்றும் பொலித்தின் பொருட்கள் இருநூறு பைகளில் சேகரிக்கப்பட்டன. இப்பொருட்கள் கடலிலிருந்து கரையொதுங்கியவையாகும்.

கிழக்கு மாகாணத்தில் உல்லாசப்பயணத்துறை ஊக்குவிப்புத்திட்டத்திற்கு கடற்கரைப் பிரதேச சுத்திகரிப்புப் பணிகள் பெரிதும் அனுகூலமாக அமையுமென்றும் கடற்கரைச் சுத்திகரிப்பு திட்டத்திற்கு அரசாங்கத்தினால் ஒதுக்கப்படும் நிதி இதனால் மீதமாகுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

# முதலிடத்தை பெற்றது இராமகிருஸ்ணா







முனைக்காடு இராமகிருஸ்ண விளையாட்டுக்கழகத்தின்54வது ஆண்டு நிறைவை சிறப்பித்தும் உயிர்நீத்த உறவுகளின் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் முனைக்காடு இராமகிருஸ்ணா விளையாட்டுக்கழகம் சம்பியனானது.

கடந்த 7,8,9 ஆம் திகதிகளில் முனைக்காடு இராமகிருஸ்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் 36அணியினர் பங்கேற்றிருந்தனர்.

போட்டியின் இறுதிப் போட்டிக்கு முனைக்காடு இராமகிருஸ்ணா அணியினரும் மகிழடித்தீவு மகிழை இளைஞர் அணியினரும் தெரிவாகி 1:0 என்ற கோள்கள் வித்தியாசத்தில் முனைக்காடு இராமகிருஸ்ணா விளையாட்டுக்கழகம் வெற்றிவாகை சூடியது. மகிழை இளைஞர் அணி இரண்டாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது

இப்போட்டியின் இறுதி நிகழ்ச்சிக்கு இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வெற்றிக்கிண்ணங்களையும், பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

## கருணாநிதியின் நூற்றாண்டு விழா கிழக்கு...

அவர் ஐந்து முறை தமிழகத்தின் முதல்வராக இருந்தவரும், 13 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, 13 முறையும் வெற்றி பெற்றவரும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழகத்தின் அரசியல் தலைவராக மட்டுமல்லாமல், இந்திய அரசியலின் திசையைத் தீர்மானிப்பவராகவும் திகழ்ந்த நூற்றாண்டு நாயகர் கருணாநிதியின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலத் திட்டங்களையும் தமிழகத்தின் வருங்காலத் தலைமுறையினர் என்றென்றும் நினைவில் போற்றும் வகையில் கருணாநிதியின் நூற்றாண்டு விழா மாநிலம் முழுவதும் ஜுன் 2023 திங்கள் முதல் ஜுன் 2024 திங்கள் வரை தமிழக அரசால் கொண்டாட முடிவு செய்யப்பட்டது நல்ல விடயம்.

ஆனால் இலங்கையில் கிழக்குமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தால் விரைவில் கிழக்கு மாகாணத்தில் கருணாநிதியின் நூற்றாண்டு விழா செய்யவுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்கள் ஊடகங்களில் கருத்து வெளியிட்டிருந்தார். உண்மையில் கலைஞர் கருணாநிதியின் நூற்றாண்டு விழா கிழக்கு மாகாணத்தில் நடத்துவது பொருத்தமான ஒன்றாக தற்போது இல்லை. வடக்கு கிழக்கு மக்கள் கடந்த பல சகாப்தங்களாக இனப்படுகொலைகளை சந்தித்தபோதெல்லாம் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் இந்திய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் அழுத்தம் கொடுத்தாலும் ஆக்கபூர்வமாக அவர் எதையும் செய்யவில்லை என்ற ஒரு கருத்து வடக்கு கிழக்கு தமிழ்மக்கள் மத்தியில் உண்டு. 2006,ல் திருகோணமலை மாவிலையாற்றில் ஆரம்பித்த போர் 2009, மே,18,ல் முள்ளிவாய்க்காலில் முடிவுற்ற போது வடக்கு கிழக்கு தமிழர்கள் பல இலட்சம் மக்கள் மாண்டபோதும் முதலமைச்சர் கருணாநிதி அவர்களால் போரை நிறுத்தவோ, தமிழ்மக்களை காப்பாற்றவோ இந்திய அரசுடன் தொடர்பு கொண்டு எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் செய்யவில்லை என்ற ஒரு மனவேதனை தமிழ்மக்கள் மத்தியில் உண்டு.

இவ்வாறான நிலையில் கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழா கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றாலும் மக்கள் அதனை விரும்பி கலந்துகொள்ளும் நிலை ஏற்படாது என்பதே எனது தனிப்பட்ட கருத்து.

கலைஞர் கருணாநிதி அவர் போற்றுதற்குரியவர் பாராட்டுதற்க்குரியவர் என்பதெல்லாம் உண்மை ஆனால் அவர் தொடர்பாக விழா எடுக்ககூடிய இடமாக கிழக்குமாகாணம் பொருத்தமானது இல்லை என்பதே எனது தாழ்மையான கருத்து.

இதை யாரையும் புண்படுத்துவதற்காக நான் கூறவில்லை எனது மனதில் பட்ட உண்மையை கூறியுள்ளேன் எனவும் மேலும் கூறினார்.

## மனம்பிட்டிய பேருந்து விபத்து :

பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் சாரதி கைது செய்யப்பட்டதை அடுத்து பொலன்னறுவை தலைமையக பொலிஸாரின் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர்,

பேருந்து சாரதியின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

பேருந்து சாரதி மது அருந்திவிட்டு பேருந்தை செலுத்தினாரா அல்லது விஷ போதைப்பொருள் ஏதேனும் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பது தொடர்பான விசாரணைகளுக்காக சம்பந்தப்பட்ட சாரதி பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான முடிவுகள் இது வரை கிடைக்கப்பெறவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இதே வேளை, விபத்தை ஏற்படுத்திய பேருந்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அனுமதிப்பத்திரம் இல்லாத பேருந்து என போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அதன் தலைவர் ஷஷி வெல்கம கூறுகையில்,

குறித்த பேருந்து உரிய அனுமதிப்பத்திரம் இன்றி பயணிகளை ஏற்றிச் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

பேருந்தின் உரிமையாளர்களுக்கு உரிய தண்டனை விதிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

மேலும், பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11 ஆக உயர்வடைந்துள்ள நிலையில் 40 பேர் காயமடைந்து பொலன்னறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## மன்னம்பிட்டி பஸ் விபத்து;

பாலத்தில் இருந்து கீழ் வீழ்ந்ததில் இரு பெண்கள் உட்பட 12 பேர் உயிரிழந்துள்ளதுடன் 40 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் சாரதியை கைது செய்துள்ளதாக மன்னம்பிட்டி பொலிசார் தெரிவித்தனர்.

இது பற்றி தெரியவருவதாவது;

குறித்த தனியார் பேருந்துபஸ்வண்டி வழமையாக தினமும் பொலன்னறுவை கதுருவெலவில் இருந்து இரவு 7.50 மணிக்கு ஆரம்பித்து கல்முனையை நோக்குணீ பிரயாணத்தில் ஈடுபடும் பஸ்வண்டி சம்பவதினமான நேற்று இரவு வழமைபோல பிரயாணத்தை ஆரம்பித்த நிலையில் பஸ்வண்டியில் இருக்கைகள் உட்பட 60 மேற்பட்டோர் பிரயாணம் செய்துள்ளனர்

இந்த நிலையில் குறித்த பஸ்வண்டி அதிவேகமாக இன்னொரு பஸ்வண்டியை முந்தியடித்துக் கொண்டு சென்ற நிலையில் மன்னம்பிட்டி கொட்டலி பாலத்தில் வேகட்டுப்பாட்டை மீறி வீதியை விட்டு விலகி ஆற்றில் வீழ்ந்ததையடுத்து அதில் இருந்த பயணிகள் ஆற்று நீரிழ் முழ்கியதையடுத்து பலர் பஸ்வண்டியில் இருந்து வெளியேற முடியாமல் போயுள்ளதுடன் காப்பாற்றுமாறு அழுகுரல்கள் குரல்கள் ஒலித்தன.

இதன் போது பொலிசார் இராணுவத்தினர் வீதியால் வாகனங்களில் பிரயாணிதவர்கள் பொதுமக்கள் ஒன்றினைந்து ஆற்றில் வீழ்ந்தவர்களை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டதுடன் காயமடைந்தவர்களை பொலன்னறுவை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இந்த சம்பவத்தில் சம்பவதினமான அன்று ஏறாவூரைச் சேர்ந்த ஒரு பெண் உட்பட 3 பேரும் ஒலுவில் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவரும் மற்றும் ஆனைமடுவ கலாவத்தை பிரதேசங்களைச் சேர்ந்த இரு பல்கலைக்கழக மணவர்கள் உள்ளிட்ட 11 பேர் உயிரிழந்துள்துடன் சிகிச்சை பலனின்றி இன்று திங்கட்கிழமை பகல் ஒரு பெண் உயிரிழந்ததையடுத்து உயிரிழப்பு 12 பேராக அதிகதித்துள்ளது

இதேவேளை; காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 40 பேரில் சிலர் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளதாகவும் இந்த விபத்தின் போது சிறு காயங்களுக்குள்ளான நிலையில் தப்பிய ஊடகவியலாளர் ஒருவர் உட்பட சிலர் தமது வீடுகளுக்கு திரும்பியுள்ளதாகவும் தெரிவித்த பொலிசார்

குறித்த பஸ்வண்டி சாரதியை கைது செய்துள்ளதுடன் சாரதி ஏற்கனவே ஆபத்தான முறையில் சாகனத்தை செலுத்திய குற்றச்சாட்டில் அபதாரம் விதிக்கப்பட்டுள்ளவர் எனவும் இவர் போதை பொருள் பாவித்துள்ளாரா என விசாரணை முன்னெடுத்துள்ளதாகவும் மேலதிக விசாரணைளை மன்னம்பிட்டி பொலிசார் மேற்கொண்டுவருகின்றனர்.

# அம்பாறை ஆலையடிவேம்பில் நெல்லை கொள்வனவு செய்யுமாறு கோரி விவசாயிகள் ஆர்பாட்டம்!!





(திருக்கோவில் நிருபர்)

அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேச விவசாயிகள் நெல்லை உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்யுமாறு கோரிக்கையை முன்வைத்து திங்கட்கிழமை (10) ஆலையடிவேம்பு பிரதேச செயலக முன்பாக ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள் அம்பாறை, உகன, தமனை பிரதேச விவசாய அமைப்புகள் உள்ளிட்ட நூற்றுக்கு மேற்பட்ட விவசாயிகள் அக்கரைப்பற்று மத்தி மணிக்கூட்டு கோபுரம் அருகில் இன்று காலை ஒன்று திரண்டனர்.

இதில் ஒரு கிலோ நெல்லை 100 ரூபாவாகவும் காய்ந்த ஈரப்பதன் அற்ற நெல்லை கிலோ 120 ரூபாவாகவும் நிர்ணயம் செய்து உடனடியாக நெல் சந்தைப்படுத்தும் களஞ்சிய சாலையை திறந்து நெல்லினை முழுமையாக கொள்வனவு செய்,

கடந்த கால அரச கொள்கையினால் உரங்கள் கிடைக்காமல் நஸ்டத்தை சந்தித்ததுடன் உற்பத்தி விலையை விட கொள்வனவு விலை குறைவாக காணப்படுவதால் நாம் நஸ்;டம் அடைந்துள்ளோம்.

அரசினால் அறிவிக்கப்படும் மானியங்கள் உரிய நேரத்தில் தமக்கு வழங்கப்படுவதில்லை என்பதுடன் இதற்கான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் ஊடாக அரசு மேற்கொள்ளவேண்டும்,

நெல்லின் உற்பத்தி ஒரு ஏக்கருக்கு 160000 - செலவாகின்ற நிலையில் தற்போதைய உஷ்ணமான காலநிலையில் நெல் போதிய விளைச்சல் இன்றி 20 தொடக்கம் 25 மூடைகள் கிடைப்பதால் தாம் நஷ;டத்தை சந்திப்பதுடன் தற்போது ஒரு மூடை நெல் 3500 ரூபா தொடக்கம் 4500 ரூபா வரை கொள்வனவு செய்வதால் 6000 ரூபாய் வரை நஷ;;டம் ஏற்பட்டுள்ளது. என பதாதைகள் ஏந்தியவாறு மணிக் கூட்டு கோபிரத்தில் இருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலமாக சாகாம வீதி ஊடாக ஆலையடி வேம்பு பிரதேச செயலகத்தை சென்றடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து அங்கு ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட நிலையில் அங்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசனிடம் ஆர்பாடகாரர்கள் கோரிக்கையடங்கி மகஜரை கையளித்ததை தொடர்ந்து அவர் இது தொடர்பில் தான் உரிய அமைச்சரிடம் ஜனாதிபதியிடம் ஆலோசித்து தீர்வினை பெற்று தருவதாக தெரிவித்தார்.

அதேவேளை பிரதேச உதவி பிரதேச செயலாளரிடமும் மகஜரினை கையளித்ததுடன் ஆர்பாட்காரர்கள் அங்கிருந்து விலகி சென்றனர்.

# மட்டு தன்னாமுனையில் முச்சக்கரவண்டி விபத்தில் குழந்தை ஒன்று உயிரிழப்பு 3 பேர் படுகாயம்

(கனகராாசா சரவணன்)



மட்டக்களப்பு ஏறாவூர் பிரதானவீதி தன்னாமுனையில் முச்சக்கரவண்டி ஒன்று(09) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வேகக்கட்டுப்பட்டை மீறி வீதியில் தடம்புரண்டு வாவிகரை கட்டுடன் மோதிய விபத்தில் ஒருவயதும் 3 மாதம் கொண்ட குழந்தை ஒன்று உயிரிழந்ததுடன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கொக்குவில் பொலிசார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பாமுனையைச் சேர்ந்த ஒரு வயதும் மூன்று மாதங்களுமுடைய பாத்திமா மைஸ்ஹறா எனும் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காத்தான்குடி பாலமுனையைச் சேர்ந்த குடும்பமம் ஒன்றைச் சேர்ந்த 4 பேர் சம்பவதினமான இன்று பிற்பகல் 2 மணிக்கு ஏறாவூரை நோக்கி முச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த போது மட்டக்களப்பு ஏறாவூர் பிரதான வீதி தன்னாமுனையில் வேககட்டுப்பாட்டை மீறி வீதியில் தடம்புரண்டு வீதியை விட்டு விலகி வாவிகரை கட்டில் மோதி விபத்துக்குள்ளானது.

இதனையடுத்து கீழே வீழ்ந்த குழந்தை மீது முச்சக்கரவண்டி ஏறியதையடுத்து குழந்தை சம்பவ இடத்தில் உயிரிழந்ததுடன் குழந்தையின் தாய் உட்பட இரு பெண்கள் உட்பட மூன்று பேர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குவில் பொலிசார் மேற்கொண்டுவருகின்றனர் .

# நீண்ட காலமாக சூதாட்டத்தில் ஈடுபட்ட 28 பேர் பெரிய நீலாவணை போலிஸாரினால் கைது

(பாறுக் ஷிஹான்)



நீண்ட காலமாக சூதாட்டத்தில் ஈடுபட்ட 28 பேர் பெரிய நீலாவணை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாண்டிருப்பு இந்து மயானம் அருகில் உள்ள வெற்றுக்காணிகளில் தினமும் பணத்திற்காக சட்டவிரோதமாக ஒன்று கூடி சூதாட்ட நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டு வருவதாக பொதுமக்களிடம் இருந்து பொலிஸாருக்கு தகவல் கிடைக்கப்பெற்றிருந்தது.

குறித்த முறைப்பாட்டிற்கு அமைய சம்பவம் தொடர்பில் பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே. வீரசிங்க வழிநடத்தலில்

பொலிசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்து 28 சந்தேக நபர்களை ஞாயிற்றுக்கிழமை (9) மாலை கைது செய்தனர்.

சட்டவிரோதமாக ஒன்று கூடி பல்வேறு சூதாட்டத்தில் ஈடுபட்டதாக கைதான அனைவரும் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக வழிநடத்தலில் பெரிய நீலாவணை பொலிஸார் குற்றங்களை குறைப்பதற்கான பல்வேறு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மண்ணம்பிட்டிய விபத்து குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு போக்குவரத்து அதிகாரசபை பணிப்பாளருக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் பணிப்பு!

(அபு அலா)





கதுருவெல, மண்ணம்பிட்டிய பேருந்து விபத்து குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கிழக்கு மாகாண போக்குவரத்து அதிகாரசபை பணிப்பாளருக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பணிப்புரை விடுத்துள்ளார்.

வடமத்திய மாகாண பொலன்னறுவை - கதுருவெல பகுதியிலிருந்து காத்தான்குடிக்குச் சென்ற பேருந்தொன்று மண்ணம்பிட்டிய பகுதியில் நேற்று (09) மாலை விபத்திற்குள்ளாகியுள்ளது. கிழக்கு மாகாணத்தை சேர்ந்த பயணிகள் அதிகமானோர் பயணித்த இப்பேருந்து பொலனறுவை மாவட்டத்தில் விபத்துக்குள்ளாகியுள்ள நிலையில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், கிழக்கு மாகாண போக்குவரத்து அதிகாரசபை பணிப்பாளரை விபத்து இடம்பெற்ற இடத்திற்கு விரைந்து சென்று, விபத்து குறித்து ஆய்வு மேற்கொண்டு அது தொடர்பில் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும், விபத்துக்குள்ளான வர்களுக்கு தேவையான அவசர உதவிகளை உடனடியாக வழங்குமாறு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதனுக்கு ஆளுநர் வலியுறுத்தியுள்ளார்.

விபத்தில் பாதிப்படைந்த மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்க மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கும் ஆளுநர் பணிப்புரை விடுத்ததுடன், இவ்விபத்தில் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களுக்கான சிகிச்சையை விரைவுபடுத்துமாறும் தெரிவித்துள்ள இதேவேளை, விபத்தில் உயிழந்தவர்களின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்ததுடன், விபத்தில் உயரிழந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# கிழக்கு பல்கலைக்கழகம் பங்கேற்ற ஹொக்கி லயன்ஸ் கழகத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா!





( வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு ஹொக்கி லயன்ஸ் கழகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய அமரர் திரு திருமதி அருளானந்தம் ஞாபகார்த்த கிண்ண முக்கோண சுற்றுப் போட்டியில் கிழக்கு பல்கலைக்கழக ஹொக்கி அணிகள் பங்கேற்றது .

இந் நிகழ்வு காரைதீவு விபுலானந்த மைதானத்தில் தலைவர் தவராசா லவன் தலைமையில் நேற்று முன்தினம்(9) ஞாயிற்றுக்கிழமை மாலை சிறப்பாக நடைபெற்றது.

கிழக்கு பல்கலைக்கழக ஆண் ,பெண் ஹொக்கி அணியினரும், காரைதீவு ஹொக்கி லயன்ஸ் அணியினரும் மூன்று போட்டிகளில் மோதினர்.

முதல் இரண்டு இரண்டு போட்டிகளில் காரைதீவு அணி வெற்றி பெற்றது. மூன்றாவது போட்டியில் கிழக்கு பல்கலைக்கழக அணி வெற்றி பெற்றது.

பிரதமர் அதிதியாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கலந்து சிறப்பித்தார்.

ஹொக்கி லயன்ஸ் கழகத்தின் ஆலோசகரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா ஹொக்கி லயன்ஸ் கழகத்தின் வளர்ச்சி அதன் ஸ்தாபக தலைவர் த.லவனின் அதீதமான அயராத முயற்சி மற்றும் அதன் சாதனைகள் பற்றி சிறப்புரையாற்றினார்.

கௌரவ அதிதிகளாக காரைதீவு பிரதேச சபை செயலாளர் ஏ. சுந்தரகுமார், முன்னாள் இலங்கை வங்கி முகாமையாளர் அ.மகேந்திரராஜா, அஸ்கோ அமைப்பின் தலைவர் ஏ. விவேகானந்தராஜா, செயலாளர் ச. நந்தகுமார், பொருளாளர் அ.சுந்தரராஜன், இணைப்பாளர் ரி.புவனேந்திரராஜா, ஆசிரியர் எஸ்.பாஸ்கரன், விளையாட்டு உத்தியோகத்தர் வி.பாஸ்கர் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

கிழக்கு பல்கலைக்கழக ஹொக்கி பயிற்றுவிப்பாளர் எஸ்.கிருஸ்ணபிரபு விசேட அதிதியாக கலந்து கொண்டார்.

வெற்றி பெற்ற அணிகளுக்கு வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன. சிறப்பு வீரர்களுக்கும் கிண்ணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# காணிக்கு குருநாதன் எனும் நூல் வெளியீடும் கௌரவிப்பும்









(பாறுக் ஷிஹான்)

எம்.ஆர்.எம் றஜாய் எழுதிய காணிக்கு குருநாதன் எனும் நூல் வெளியீடும் கௌரவிப்பும் கிழக்கு மாகாண குடியேற்ற உத்தியோகத்தர் தொழிற்சங்கம் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை(9) மாலை 3.30 மணியளவில் கல்முனை கிருஸ்டா இல்ல மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது காணிக்கு குருநாதன் எனும் நூல் வெளியீட்டு நிகழ்வில் கதாநாயகன் முன்னாள் உதவி காணி ஆணையாளர் கே.குருநாதனை வாழ்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் பல்வேறு நிகழ்வுகளும் சிறப்பாக அரங்கேறின.

அம்பாறை மாவட்ட தலைமைப்பீட காணி உத்தியோகத்தர் கே.எம் முஸம்மில் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றதுடன் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

மேலும் இந்நிகழ்வில் கல்முனை ,சாய்ந்தமருது, நிந்தவூர், சம்மாந்துறை ,பொத்துவில், லகுகல, பிரதேச செயலாளர்கள், உட்பட கிழக்கு மாகாண பேரவை உதவி செயலாளர் எம்.சி அன்சார், முன்னாள் உதவி காணி ஆணையாளர் கே.குருநாதனின் உறவினர்கள், நண்பர்கள் ,என பலரும் கலந்து கொண்டு நூலின் பிரதிகளை பெற்றுக்கொண்டனர்.

# ஈழ தமிழர்களுக்கு தீர்வாக வரையும் வரைபில் முஸ்லீம், சிங்கள, மலையக மக்களுக்கும் அதேயளவு பங்கு உள்ளடக்கப்பட்டுள்ளது

## யாழ் பல்கலைக்கழக அரசியல்துறை தலைவருமான பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம்

(கனகராசா சரவணன்)

வடக்கு கிழக்கில் ஈழத் தமிழர்களுக்கு சார்ந்து எவ்வளவு முதன்மை படுத்தப்படுகின்றதே அதேயளவு முஸ்லீம், சிங்கள, மலையக மக்களுக்கும் உரித்துடைய பங்கினை இந்த வரைபில் உள்ளடக்கியுள்ளதுடன் இதன் ஊடாக ஈழதமிழர்களின் அரசியல் பிரச்சனைக்கான அங்கீகரிக்கப்பட்ட ஒரே தீர்வாக இந்த வரைவு உள்ளடக்கவேண்டும் என முன்னெடுத்துவருவதாக மக்கள் சிந்தனை மைய இணைத்தலைவரும் யாழ் பல்கலைக்கழக அரசியல்துறை தலைவருமான பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் தெரிவித்தார்.



மக்கள் சிந்தனை மையம் தமிழ் மக்களின் தீர்வாக அமையக்கப்படும் வரைபு தொடர்பாக கிழக்கு மாகாணத்திலுள்ள சிவில் அமைப்புக்களுடனான கலந்துரையாடல் மட்டக்களப்பு ஈஸ்லகுன் ஹோட்டலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (09) இடம்பெற்றது இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவர்வாறு தெரிவித்தார்.

வடக்கு கிழக்கை சார்ந்திருக்க கூடிய அரசில் தீர்வை நோக்கி பல தளத்தில் பல்வேறுபட்ட வரைபுகள் முதன்மை படுத்தப்பட்டது வரைபுகள் அனைத்துமே அரசியல் கட்சிகளாலும் சில சிவில் அமைப்புக்களாலும் தொடக்கப்பட்டு கைவிடப்பட்டநிலை காணப்பட்டது.

இதனால் அந்த சூழலையும் இன்று இருக்க கூடிய சூழலையும் கருத்தில் கொண்டு ஒரு வரைபை தயார் செய்து அந்த வரைபினுடைய உள்ளடக்கம் அனைத்தையும் சிவில் அமைப்புக்களுடன் உரையாடி அதில் என்ன என்ன விடையங்களை இணைத்துக் கொள்ளுதல் அதனுடைய முக்கியத்துவம் என்ன என்பதைப்பற்றி சிவில் அமைப்புக்களின் காத்திரமான பங்கு இந்த வரைபில் உள்ளடக்க வேண்டும் என்ற நோக்கோடு வடக்கு கிழக்கு சார்ந்த சிவில் அமைப்புக்களுடன் இரண்டு தினமும் சந்தித்து உரையாடியுள்ளோம்.

இந்த உரையாடலில் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள சிவில் அமைப்புக்கள்; அதிகமான விடையங்களை தெரிவித்துள்ளதுடன் எதிர்காலத்தில் உள்ளடக்கங்களை வலிமைப்படுத்துவதற்கும் ஆரோக்கியமான உரையாடலை செய்துள்ளனர்.

எனவே இந்த வரைபு ஈழத் மிழர்களுடைய அரசியல் சார்ந்திருக்க கூடிய தீர்வாக அரசியல் கட்சிகள் சிவில் அமைப்புக்கள் புலம்பெயர்ந்த அமைப்புக்கள் அனைவருக்கும் இடையிலான பொதுவான ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஒரே தீர்வாக இந்த விடையத்தை முதன்மை படுத்துவதற்கான நோக்கம் கொண்டு இந்த மக்கள் சிந்தனை மையம் ஏற்படுத்தியுள்ளது

2001 ம் ஆண்டில் இருந்து மக்கள் சிந்தனை மையம் அரசியல்கட்சிகள் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் உரையாடி இந்த வரைபை வரைந்துவிட்டு அந்த வரைபை மக்கள் மற்றும் சிவில் அமைப்புக்களிடம் தெளிவையும் உண்மை தன்மையையும் வலியுறுத்திவிட்டு மீண்டும் அரசியல் கட்சிகள் புலம்பெயர்ந்த அமைப்புக்கள் இந்த விடையம் தொடர்பாக உரையாடி ஒரு இறுதி முடிவை எடுத்த பிற்பாடு ஊடகங்கள் மூலம் அதனை அறிவிப்போம் என திட்டமிட்டுள்ளோம்.

இந்த வரைபினுடைய உள்ளடக்கம் ஏற்கனவே முன்வைக்கப்பட்டிருக்கின்ற அல்லது இலங்கையினுடைய அரசியல் அமைப்பில் பொருத்தப்பாடு உடையது என கருதப்படக் கூடியதை உள்ளடக்கி இந்த வரைபை முதன்மை படுத்தியுள்ளது கூட்டாச்சியும் கூட்டு சமஸ்டிக்குரியது13 சார்ந்தும் உரையாடப்படுகின்றதுடன் இவை எல்லாவற்றையும் ஈழ தமிழர்களின் ஒரே வரைவாக முதன்மைபடுத்தும் நோக்கோடு வரையப்படும்.

இதன் ஊடாக ஈழதமிழர்களின் அரசியல் பிரச்சனைக்கான தீர்வை இந்த வரைவு உள்ளடக்க வேண்டும் என செயற்படுகின்றோம். இந்த தீர்வு வடிவமாக்கப்பட் பிற்பாடு எல்லா தரப்பும் அங்கீகரிக்கப்பட்ட வகையில் இந்த உரையாடல்களை செய்ய வேண்டிய தேவைப்பாடு எழுந்துள்ளது.

இலங்கை அரசாக இருக்கலாம் அல்லது அரசுடன் பயணிக்க கூடிய பிற சக்;திகள் மற்றும் புலம் பெயர்ந்த தளத்தில் உள்ள அமைப்புக்கள் உடன் உரையாடலை செய்து இந்த வரைவை முதன்மைபடுத்துவதுடன் 2009 பின்னர் இந்த மக்கள் ஒன்று சேர்ந்து தங்களுடைய எண்ணங்களை அவிப்பிராயங்களையும் முதன்மைபடுத்தி பெருமளவுக்கு இந்த வரைபை முளுமைப்படுத்தியுள்ளனர்.

எனவே அதன் இசைவை நோக்கி தென் இலங்கை அரசு மற்றும் இந்த விடையங்களுடன் தொடர்புபடுகின்ற அனைத்து சக்த்திகளும் கவனம் கொள்ள வேண்டும் என்பது இதனுடைய முக்கியமான நோக்கம்

வடக்கு கிழக்கில் இருக்கின்ற சிங்கள மக்கள் தங்களுடைய அடிப்படை உரிமைகள் வாழிவியல் இருப்பு பாதுகாப்பு மற்றும் அவர்கள் தேசிய தனித்து வங்களை பேணக்கூடய ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்படுகின்ற ஒரு சூழல் போன்றவை இந்த வரைபின் உள்ளடக்கம் அமைந்திருக்கின்றது

அதனுடைய பிரதிபலிப்பு முஸ்லீம்கள் அல்லது சிங்கள மக்கள் சர்ந்து முதன்மைபடுத்தப்படல் என்பது இதனுடைய வரைபில் செயல்பூர்வமான வடிவத்துக்கு கொண்டுவரும் போது அது தொடர்பான முழுமையானது காணப்படும் இதில் தேசியங்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்கு உரித்துடைய அதாவது ஈழத் தமிழர்களுக்கு முதன்மை படுத்தப்படுகின்ற அதே அளவு முதன்மை முஸ்லீம் சிங்கள, மலையகமக்களுக்கும் உரித்துடைய பங்கினை இந்த வரைபு தனுக்குள்ளே உள்ளடக்கியுள்ளது

ஏற்கனவே முன்வைக்கப்பட் அனைத்தும் அந்தந்த தரப்புக்கள் தமது தேவைகளுக்கும் நலனுக்குமாக கட்டமைக்கப்பட்டு வரையப்பட்டதாக காணப்படுகின்றது சில அபை;புக்கள் வரைந்த வரைபுகளை தொடர்ச்சியாக பேனவில்லை அல்லது முதன்மைப்படுத்த வில்லை அல்லது மக்களுடன் தொடர்ந்து உரையாடல் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கின்றது.

எனவே அதிலிருந்து விலகி மக்களுடனும் சிவில் அமைப்புக்களுடனும் சேர்ந்து இந்த விடையத்தை முன்னெடுக்கின்ற என்னப்பாடு எங்களிடம் காணப்படுகின்றது அத்துடன் இந்த வரைபின் உள்ளடக்கம் அதிதிமானது ஒரு கூட்டு சமஸ்டி குறித்து 3 விடையங்களை முதன்மைபடுத்தியுள்ளோம்.

குறிப்பிட்ட காலப்பகுதியில் இந்த வரைபை முளுமைபடுத்தி அதற்கு கீழ் ஒரு உரையாடலை செய்வது அது சாத்தியப்படாதபோது ஒரு கூட்டு சமஸ்டிக்குரிய வலிமை என்பதை முதன்மை படுத்தியுள்ளோம் அத்தகைய அம்சங்களை செயல்படுத்தும் சூழல் சாத்தியப்படாத போது ஈழ தமிழர்கள் தங்களுடைய சுயநிர்ணயம் சார்ந்த விடையங்களில் சில தீர்மானங்களை எடுக்க சந்தர்ப்பம் வருகின்றபோது ஒரு பொது வாக்கெடுப்பை நோக்கி போவதற்கான எண்ணத்தையும் இந்த வரைபு இந்த முதன்மையான அம்சத்தை கொள்ள திட்டமிட்டுள்ளது

பெருமளவிற்கு மக்கள் சார்ந்துள்ள பிரச்சனைகளுக்குரிய தீர்வை அவர்கள் அகிம்சை ரீதியாக ஜனநாயக மரபுகளுக்குட்பட்ட ரீதியில் கோரிக்கைகளையும் எண்ணங்;களையும் முதன்மை படுத்துகின்றனார் இது தொடர்பான சமஸ்டி அல்லது கூட்டு சமஸ்டி சார்ந்தவை சாத்தியமற்றுப் போகும் போது பொதுவாக்கு எடுப்புக்கு செல்லவேண்டியது என இந்த வரைபில் உள்ளடக்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# லீனத் பாலர் பாடசாலை சிறுவர் சிறுமியர்களின் பட்டமளிப்பு விழாவும், வருடாந்த நிகழ்வும்





(பாறுக் ஷிஹான்)

கடந்த 18 வருட காலமாக கல்முனை அலியார் வீதியில் இயங்கி வருகின்ற லீனத் பாலர் பாடசாலை சிறுவர் சிறுமியர்களின் பட்டமளிப்பு விழாவும், வருடாந்த நிகழ்வும் பாலர் பாடசாலையின் ஸ்தாபகரும் அதிபருமான எஸ்.தஸ்லி உம்மா தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்றது.

இந்நிகழ்வின்போது பாலர்பாடசாலைச் சிறார்களின் சந்தைப் பொருட்கள் சிறுவர் சந்தை எனும் தொனிப்பொருளில் விற்பனைக்காக பொதுமக்கள் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும், ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூர் மற்றும் கௌரவ அதிதியாக கல்முனை அஸ்-ஸுஹறாறா வித்தியாலயத்தின் அதிபர் திருமதி எம்.எச்.எஸ்.ஆர்.மஜீதியாவும் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் இந்நிகழ்வுக்கு ஊடகவியலாளர்கள், பாலர் பாடசாலையின் ஆசிரியர்கள், பெற்றோர்கள், ஊர் மக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# வாச்சிக்குடா, அருள் மிகு ஸ்ரீ ராமபக்த பஞ்சமுக ஆஞ்சநேயர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம்









(ம.கிரிசாந்)

கிழக்கு மாகாணம், ஆலையடி வேம்பு பிரதேச, வாச்சிக்குடா அருள் மிகு ஸ்ரீ ராமபக்த பஞ்சமுக ஆஞ்சநேயர் தேவஸ்தான புணராவர்த்தன மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு உற்சவநிகழ்வுகள் கருமாரம்பத்துடன் கடந்த புதன்கிழமை (05) ஆரம்பமாகியது.

அதனைத் தொடர்ந்து எண்ணைக்காப்பு சாத்தும் நிகழ்வு (07) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிமுதல் கிரிகைகளுடன் ஆரம்பமாகி அடுத்த நாள் (08) ஆம் திகதி மாலை 04.00 மணிவரை இடம்பெற்றதுடன்.

(09/07/2023) ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.42 மணிமுதல் 10.20 மணிவரையுள்ள சுப நேரத்தில் மஹா கும்பாபிஷேக நிகழ்வு நூற்றுக்கணக்கான பக்த அடியார்கள் சூழ பக்திபூர்வமாக கோலாகலமாக இடம்பெற்றது.

# சிறப்பாக நடைபெற்ற ஆசிரியர் கலாசாலை ஒன்று கூடலும் பணிநிறைவு பாராட்டு விழாவும்!

(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை 91 /92 ஆம் ஆண்டு அணியின் மூன்றாவது ஒன்று கூடலும் , பணி நிறைவு பாராட்டு விழாவும் அணித் தலைவர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் கடந்த(8) சனிக்கிழமை மல்வத்தையில் சிறப்பாக நடைபெற்றது.

அந்த அணியின் உறுப்பினர்களான மல்வத்தையைச் சேர்ந்த அதிபர் பொன் நடராஜன் ஆசிரியை திருமதி வசந்தினி நடராஜன் தம்பதியர் ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வு பெறுவதால் அவர்களுக்கான பணிநிறைவுபாராட்டு வைபவமும் நடைபெற்றது.

முன்னதாக அறுபது வயதில் ஓய்வுபெற்ற நடா வசந்தி தம்பதியினரின் பிறந்த நாள் வைபவம் இடம் பெற்றது. அந் நிகழ்விற்கு காரைதீவு பிரதேச சபை தவிசாளர் முன்னாள் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் அதிதியாக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார். முப்பது வருடங்களுக்கு பின் இடம் பெற்ற இவ் ஒன்றுகூடலில் திருகோணமலை தொடக்கம் திருக்கோவில் வரையான பிரதேசங்களில் இருந்து 39 ஆசிரியர்கள் உணர்வு பூர்வமாக கலந்து மகிழ்ந்தனர்.

உறுப்பினர்களான சா.புண்ணியமூர்த்தி ஆ.புட்கரன் ஆகியோர் தாம் யாத்த வாழ்த்துப்பாமாலையை வாசித்து கையளித்தனர்.

அவர்களுக்கு முறையே கவிமாமணி அருட் கவியரசு ஆகிய விருதுகள் சான்றிதழில் வாசித்து வழங்கி வைக்கப்பட்டன.

ஆசிரியை சுகுணாவின் நெஞ்சம் மறப்பதில்லை என்ற பாடல் சாயலில் புதிதாக புனையப்பட்ட பாடலை பாடி பலரது கவனத்தையும் ஈர்த்தார்.

கலந்துகொண்ட அனைத்து உறுப்பினர்களும் வாழ்த்துரைகளை வழங்கினர். ஓய்வு பெற்ற தம்பதியினருக்கு பொன்னாடை போர்த்தி பரிசுகளும் வழங்கப்பட்டன.

அச்சமயம் நடாவின் தாயார் திருமதி பொன்னம்பலம் மாமனார் பொன்னம்பலம் இரு புத்திரர்கள் உள்ளிட்ட குடும்ப உறவுகளும் கலந்து கொண்டனர். அவ்வளவு நேரமும் இந்த அணியைச் சேர்ந்த ஆனால் புலம்பெயர்ந்து வாழும் தீவிர நண்பர்களான லண்டன் நண்டு நடா, ஜெர்மனி விஜயகலா, அவுஸ்திரேலியா முஸ்தபா ரவி ஆகியோர் நிகழ்வு நிறைவுறும் வரை வீடியோ தொழினுட்பத்தில் பார்த்து மகிழ்ந்ததும் குறிப்பிடத்தக்கது.



இதற்கென்று அந்த புலன அணியை சேர்ந்த முப்பத்தொன்பது உறுப்பினர்கள் திருகோணமலை தொடக்கம் திருக்கோவில் வரையான பிரதேசங்களில் இருந்து வருகைதந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம கடமையினைப் பொறுப்பேற்றார்!

(சர்ஜுன் லாபீர்)

அம்பாறை மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக சிந்தக்க அபேவிக்ரம இன்று(10) காலை 10.05 மணிக்கு தனது கடமையினைப் பொறுப்பேற்றார்.

இவற்றுக்கப்பால் அரச பணியில் பல உயர்பதவிகளை ஆற்றியுள்ளார்.

இவர் இதற்கு முன்னர் தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப் பதவியேற்கும் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் வி.யேகதீஸன்,அம்பாறை மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலகத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



எழுதத் தூண்டும் எண்ணங்கள் : 06

# நாமது முன்னோர் உருவாக்கிய மரபுகள், சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்களை மாற்றலாமா?

அவரவர் தமக்குரிய ஆயுளும் கல்வியும்,
தொழிலும் வாழ்க்கையும்
எழில், செல்வம், மரணம் இவை ஏழும்
தவமுடைப் பிரம்மதேவன்
தமது கைப்பட்டுத் தொடங்கு முன்னே
சிவன் அருளினாலே கருவிலே
உருவானது - விவேகசிந்தாமணி



நமது முன்னோர்களில் பலர் நீதி, நியாயம், நேர்மை, பணிவு, அடக்கம் ஆகிய சிறந்த பண்புகளுடன் வாழந்து மறைந்திருக்கினறனர். அவர்களின் வாழ்க்கை நமக்குப் பல படிப்பினைகளை உணர்த்திச் சென்றிருக்கிறது. இந்த உடலுக்குள் உயிரைக் கொடுத்த இறைவன் நமக்கென்றொரு விதியையும் எழுதி வைத்திருக்கிறான் என்பது மேலுள்ள பாடல். அந்த விதிக்கப்பட்ட வாழ்க்கையை நாம்தான் வாழ்ந்து முடிக்க வேண்டும். அந்த வாழ்க்கையைத் திறம்பட வாழ்ந்து முடிப்பதற்காக பரிசம், ரசம், கந்தம், ரூபம், ரூபாரூபம், பகுத்தறிவு ஆகிய ஆறறிவையும் தந்திருக்கிறான். 'மனிதம் பாதி மிருகம் பாதி சேர்ந்து செய்த கலவை' இந்த உடம்பு. நம் மூளை மிருக குணமும், மனித குணமும் சேர்ந்த கலவையாக இயங்குகிறது. நமது மூளையின் முன்பகுதி மனித குணத்தையும், பின்பகுதி மிருக குணத்தையும் வெளிப்படுத்தத் தக்கவாறு அமைந்திருக்கின்றன. நல்ல, நேரான விடயங்கள் முன் மூளையாலும், எதிர்மறையான விடயங்கள் பின் மூளையாலும் கையாளப்படுகின்றன. 'குலத்தளவே ஆகுமாம் குணம்’ என்பது ஔவையார் வாக்கு. அதன் அடிப்படையில் ஒருவரின் குணம் அவரது பரம்பரை, வாழும் சூழல், அவர் கூடும் நபர்கள் ஆகியவற்றால் தீர்மானிக்கப்படுகின்றன. இதில் அவர் பெறும் கல்வி, ஒழுக்க நெறி முறைகள், விழுமியப் பண்புகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

மனித வாழ்க்கையில் பல சம்பவங்கள், நிகழ்வுகள் நாம் அறியாமலே நடந்தேறும். இதில் கனவுநிலை, நனவுநிலை, நனவிலி நிலை ஆகிய ஆளுமைப் பண்புகளும் பெருமளவு பங்களிப்புச் செய்கின்றன. மனதில் தோன்றும் உணர்வுகள், எண்ணங்கள், சிந்தனைகள் ஆகியன நமது நடத்தைக் கோலங்களைத் தீர்மானிக்கின்றன. மனித நடத்தையின் பெரும்பாலானவை நனவுநிலையிலேயே நடக்கின்றன. இவை நமது மனதிலும் மூளையிலும் கட்டமைக்கப்பட்டவையாக வெளிப்படுகின்றன. எதிர்மறையான விடயங்கள் நமது மனதை அழுத்தும்போது அவை பின் மூளையில் பதிவிடப்பட்டு மூளைக்கு இனம்புரியாத தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அதனால் மனவெழுச்சி, கோபம், தன்முனைப்பு, பதட்டம், பதகளிப்பு, நெருக்கீடு ஆகிய எதிர்மறையா உணர்வுகள் தோன்றி மனதுக்கும் மூளைக்கும் இடையில் ஒரு போரட்டத்தையே ஏற்படுத்தி விடுகின்றன. இந்த நேரத்தில் தலை வலிக்கும். தலை பாரமாக இருக்கும். முகத்தில் தசைநார்கள் இறுக்கமடையும். நேரான (Positive) சிந்தனையின்போது இத்தகைய தாக்கங்கள் மனதிலும் மூளையிலும் ஏற்படாது. நோய் குறையும், ஆயுள் அதிகரிக்கும். மனதில் சந்தோசம், மகிழ்ச்சி தோன்றும். அதனால் நிம்மதியான வாழ்க்கை வாழலாம்.

எது எப்படி இருந்தாலும் ஒருவரின் பிறப்பு, ஆயுள், கல்வி, தொழில், வாழ்க்கை, அழகு,, செல்வம், மரணம் ஆகியன இறைவன் எழுதியதன்படியே நடந்தேறும். கல்வி, தொழில், வாழ்க்கை ஆகியவற்றைப் பகுத்தறிவைக் கொண்டு நாம் வடிவமைத்துக் கொள்ளலாம். 'தாரமும் கல்வியும் அவரவர் தலைவிதிப்படி’ என்பதற்கு இணங்க நிர்ணயிக்கப் பட்டிருக்கும். அவற்றை நேரான சிந்தனைகள் ஊடாகத் திட்டமிட்டு நமக்குச் சாதகமாக்கிக் கொள்ளலாம். இந்த இடத்தில் நாம் செல்லும் பாதை நமக்குத் தெரிய வேண்டும். மனம் போன போக்கில் நாம் பிரயாணம் செய்யக் கூடாது. இதையே கவிஞர் கண்ணதாசன் 'மனம் போன போக்கிலே கால்கள் போகலாமா?, கால்கள் போன போக்கிலே மனம் போகலாமா?, மனம் போன போக்கிலே மனிதன் போகலாமா?, மனிதன் போன பாதையை மறந்து போகலாமா? எனப் பாடி நேரான வாழ்க்கைக்கு வழிகாட்டி இருக்கின்றார். எவரொருவர் மனதையும் புத்தியையும் அலையவிடாது சமநிலையில் பேணித் தமது நடத்தையை வடிவமைத்துக் கொள்கிறாரோ அவரே சிறப்பான வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வார்.

மனித வாழ்க்கைக்குத் தேவையான பழக்க, வழக்கங்கள், மரபுகள், சம்பிரதாயங்கள், சமய, கலாசார, ஒழுக்க, விழுமியங்கள் யாவும் நமது முன்னோர்களால் காலத்துக்குக் காலம் நமக்கு உருவாக்கித் தந்ததாகும். கி.பி 5 ஆம் நூற்றாண்டு வரையும் இயற்கை வழிபாட்டுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வந்திருக்கின்றன. சில இடங்களில் மாத்திரம் சிறிய கோயில்கள் அமைக்கப்பட்டு வழிபாடு இயற்றப்பட்டு வந்திருப்பதை அறிகிறோம். பல்லவர் ஆட்சிக் காலத்தில் இருந்து பல்லவ மன்னர்களால் பாரிய எடுப்பிலான கற்கோயில்களும், கற்சிலைகளும் அமைக்கப்பட்டு வழிபட்டு வந்திருக்கின்றனர். ஏழாம், எட்டாம் நூற்றாண்டில் இருந்து இறைவனுக்கு உருவம் கொடுக்கும் நடைமுறைகளும் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றன. இறைவர்களுக்கு உருவம் கொடுப்பதில் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் பெரும் பங்காற்றி இருக்கின்றார். தம்மைப் போல், தம்மைவிட இறைவர்களும் அழகாக இருப்பார்கள் எனக் கொண்டு ஓவியங்கள், சித்திரங்கள் வரைந்தார்கள், சிலைகளை வடித்தார்கள் இவ்வாறுதான் மக்கள் மத்தியில் உருவ வழிபாடு பிரபல்யம் பெற ஆரம்பித்தது. ஒன்றை ஒருவர் பின்பற்றினால் பழக்கமாகிறது. அதனைப் பலர் பின்பற்றினால் பழக்கம் வழக்காகிறது. சமூகம் பின்பற்றினால் மரபு, சம்பிரதாயமாகிறது. ஒரு இனம், அல்லது மதக் குழுமம் பின்பற்றினால் அது ஒழுக்கலாறு, பண்பாடாகிறது. இவ்வாறுதான் கோட்பாடுகள், விதிகள், சட்டங்கள் உருவாகி நம்மை இயக்கி, வழிநடத்திக் கொண்டிருக்கின்றன. இந்தப் பழக்க, வழக்கங்கள், மரபுகள், சம்பிரதாயங்கள் என்பவற்றில் பல போலிகளும், மூடநம்பிக்கைகளும் இருக்கின்றன. அவற்றை அன்னம் போல் வேறு பிரித்துக் களைந்தெறிவதும் நமது கடமையாக இருத்தல் வேண்டும். இன்று சில போலிகளுக்கும் மூடநம்பிக்கைகளுக்குமாகப் பல ஆயிரங்கள், இலச்சங்கள் விரயம் செய்யப்படுகின்றன. இதனைப் பல வீடுகள், கோயில்கள், விழாக்கள், சடங்குகள். சம்பிரதாயங்களிலும் காணலாம். இத்தகைய பல நிகழ்வுகள் மக்களிடத்தில் பல மூடநம்பிக்கைகளைத் தோற்றுவித்து விடுகின்றன. பரிகார பூசை, பிரயச்சித்தம், தோச நிவர்த்தி, அர்ச்சனை, பில்லி, சூனியம், கழிப்பு, பேய், பிசாசு, ஆட்டுச் சடங்கு, பலி கொடுத்தல், காணிக்கை, நேர்த்திக்கடன், தட்சணை, உபயம், விரதம், மடிப்பிச்சை ஆகியன ஏன், எதற்கு, எவ்வாறு, எப்படி என்றில்லாமல் அவர்களும் பின்பற்றி வருகின்றார்கள், நாங்களும் பின்பற்றி வருகிறோம் எனக் கண்மூடித்தனமாகப் பலவற்றைப் பின்பற்றி வருகின்றார்கள். இதையெல்லாம் பின்பற்றாதவர்களை விட பின்பற்றுபவர்களே வாழ்க்கையில் பல துன்பஙகளையும், வேதனைகளையும் அனுபவித்து வருகின்றனர். இவற்றைப் பல சந்தர்ப்பங்களில் நாமும் கண்டிருக்கிறோம்.

ஒரு பிரச்சினை பற்றி ஆலயக் குருக்களிடம் கூறினால் அது பகை, இது பகை, தோசம் என்றெல்லாம் கூறி அர்ச்சனை, தோச நிவர்த்தி, பரிகாரம், தானம், பூசை என்றெல்லாம் கூறி பல ஆயிரம் செலவழிக்க வைத்து விடுவார். இதையே பூசாரி ஒருவரிடம் கூறினால் பேய், பிசாசு, பில்லி, சூனியம், கழிப்பு, பூசை, புனஸ்காரம், சாத்திரம் கேட்டல், குறி பார்த்தல், கெடுதி கேட்டல், வெற்றிலை வைத்துக் கேட்டல் என்றெல்லாம் கூறிச் செய்விக்க வைத்துப் பல ஆயிரங்களைச் செலவு செய்ய வைத்து விடுவார்கள். நோய் என்று வைத்தியரிடம் சென்றால் அவர்களும் நம்மிடம் இருந்து கறந்து விடுவார்கள். இவ்வாறு பலர் மூடநம்பிக்கைகளால் திண்டாடி, நிம்மதி இழந்து நிற்கின்றார்கள்.

விவேக சிந்தாமணிப் பாடலும் பிரம்மதேவன் விதியை எழுதுவதற்கு முன்னரே இறைவன் எழுதிவிடுகிறான் என்கிறது. இந்த விதிக்கப்பட்ட விதியைக் கூட மதியால்(புத்தி, அறிவு) வெல்லலாம் என்கிறது முதுமொழி. நமக்கு வரும் துன்பம், துயரம், வேதனைகள், வலிகள், இழப்புக்கள், நெருக்கீடுகள் அகியவற்றை நமது அறிவு, அனுபவம், புத்தி சாதுரியம் என்பவற்றைப் பயன்படுத்தி நாமே தீர்த்துக் கொள்ள வேண்டும். வழி உண்டானால் அதற்குரிய இடமும் இருக்கும். உனக்குரிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நீயே லழியைத் தேடிக் கண்டுபிடித்துக் கொள். வெற்றியோ தோல்வியோ உனது வாழ்க்கை உன் கையில் இருக்கிறது என்பதில் நம்பிக்கை வைத்துச் செயற்பட்டால் 'இதுவும் கடந்து போகும்’ உனது வாழ்க்கை மாறும். நம்பிக்கை கொள். நிச்சயம் வெற்றியடைவாய். போலிகளையும் மூடநம்பிக்கைகளையும் கண்மூடித்தனமான நம்பிக்கைகளையும் விட்டொதுக்கி, விதியை மதியால் வெல்லப்பார். இதுவே உன்னையும் உன் குடும்பத்தையும் சீரான வாழ்வு வாழ வழி சமைக்கும்.



சோலையூர்க் குருபரன்

பிறப்பு, இறப்பு, மாதவிலக்கு ஆகியன மங்கலமான நிகழ்வுகளாகும். பிறப்பு என்பது நமக்கு ஒரு வாரிசு வந்து சேருவதனால் அது மகிழ்ச்சிகரமான மங்கல நிகழ்வாகிறது. அதைக் குற்றம், தீட்டு, தொடக்கு, ஆசுஸ்யம், வலக்கு எனக் கூறுகின்றனர். முன்பு மங்கலமாகப் பார்த்த நிகழ்வொன்று, யாரோ ஒருவர் அதனைத் தொடக்காக விலக்கி வைத்த நிகழ்வு இப்போது மரபு, சம்பிரதாயமாகி விலக்காகக் கொள்ளப்படுகின்றது. ஆரிய வேதமும், அதனையொட்டி வந்த பிராமணியக் கொள்கைகளும் இடைப்பட்ட காலத்தில் பிறப்பினைத் தீட்டாகக் கொள்கிறது. இதனை அடிப்படை மதவாதிகள் பற்றிப் பிடித்துக் கொண்டு கடைப்பிடித்து வருகின்றனர். அதேபோல் இறப்பு என்பது ஒரு நிரந்தரமான முடிவு. அது நிச்சயமானது. அதனை யாராலும் தடுத்துவிட முடியாது. நம்மோடு வாழ்ந்த ஒருவர் இறப்பது துக்கம்தான். இருந்தும் அவரைப் பற்றுறுதி இல்லாமல் வழி அனுப்பி வைக்க வேண்டும். அப்போதுதான் அவருக்குரிய மோட்சம் கிடைக்கும். அதை விடுத்துப் பற்றோடு அழுது புலம்பி பற்றிப் பிடித்து அவரின் இறுதிப் பயணத்தைத் தடுத்துவிடுகிறோம். அவர்கள் பற்றிய நினைவு இருக்க வேண்டுமே தவிர பற்று இருக்கககூடாது. இறந்தபின் ஒருவரின் ஆத்மா எதிர்மறையாகவே செயற்படும். அவர்களிடம் நேரான குண இயல்புகள் காணப்பட மாட்டாது. அத்தகையவர்களைக் கனவில் காண்பதை விரும்பக்கூடாது. உலகிலுள்ள பல மதங்கள் இறப்பினை மகிழ்ச்சியாகவே கருதுகின்றன. இந்து மதம் அதனையும் தீட்டாகப் பார்க்கிறது.

சமயத் துறவி ஒருவரின் மனைவி இறக்கிறார். ஊர் மக்களெல்லாம் திரண்டு துறவியின் வீட்டுக்குச் செலகின்றனர். அங்கே துறவி சந்தோசமாக எதையோ பாடிக் கொண்டிருக்கிறார். இதைக் கண்ட ஊர் மக்களுக்குக் கோபம் கோபமாக வருகிறது. அதில் ஒருவர் எழும்பிச் சென்று மனைவி இறந்த துக்கம் இல்லாமல் எதையோ பாடிக் கொண்டிருக்கிறீர்களே எனக் கேட்டார். அதற்கு அவர் இது துக்கமான நிகழ்வு அல்ல மகிழ்ச்சிகரமானது. நான் சந்தோசமாக மகிழ்ச்சியோடு அவரின் ஆத்மாவை சொர்க்கத்துக்கு அனுப்பி வைக்க விரும்புகிறேன். நீங்கள் அழுது புலம்பி அவரின் சொர்க்கப் பயணத்தைத் தடுத்துவிடாதீர்கள். எனது மனைவி சுமங்கலியாக மோட்சமடையப் போகின்றாள். அதை நீங்கள் ஏன் தடுக்கிறீர்கள். சிறிது நேரத்தில் இந்த மாய உடலைப் பஞ்ச பூதங்களுடன் கலக்கச் செய்து விடுவேன். என்னோடு மகிழ்ச்சியாக வாழ்ந்தவள். அவளை மகிழ்ச்சியாக அனுப்கபுகிறேன். நீங்கள் எவரும் துக்கப்பட வேண்டாம் என்று துறவி கூறுவது பல உண்மைகளை உணர்த்தி நிற்கிறது.

அதேபோல் மாதவிலக்கு என்பது ஒரு பெண் பருவமடைந்து மாதவிலக்கு நிற்கும்வரை மாதாந்தம் நடைபெறுகின்ற ஒரு நிகழ்வு. சூலகத்தில் உற்பத்தியாகும் கருமுட்டை 28 நாளின் பின்னர் உடைந்து யோனி ஊடாக வெறியேறுகிறது. இந்நிகழ்வு மாதமொருமறை ஏற்பட்டு எதிர்காலக் கருக்கட்டலுக்காக கருப்பை, பலோப்பியன் குழாய், சூலகம், கருப்பைச் சுவர் ஆகியவற்றுக்குரிய பலத்தை இயற்கையாகவே சேர்க்கிறது. இந்த இயற்கையான நிகழ்வை விளங்கிக் கொள்ளாத ஆணாதிக்கம் கொண்ட மத அடிப்படைவாதிகள் இதனை விலக்கு, குற்றம், தொடக்கு எனக் கூறி ஒதுக்கி வைக்கின்றனர். அம்மன் கோயில்களில் கதவு திறந்து விழாக்கள் நடைபெறும் காலங்களிலும் கோயில் திருவிழாக்களின் போதும் தொடக்கு என்று கூறிப் பெண்களை ஒதுக்கி வைக்கின்றனர். யாரோ ஒரு ஆணாதிக்க மதவாதி கூறிவைத்த வழக்கம் இப்போது சம்பிரதாயமாகிவிட்டது. அதையே நாமும் விடாப்பிடியாகக் கடைப்பிடித்து வருகிறோம்.

வீட்டு நிலையம் எடுத்தல் தொடர்பாக வாஸ்த்து சாத்திரம், மனையடி சாத்திரம், வீடு மனை சாத்திரம் ஆகிய நூல்களில் தெளிவாகக் கூறப்படுகின்றன. அத்தோடு பஞ்சாங்கத்திலும் சில விடயங்கள் உள்ளன. தற்காலத்தில் வீட்டு நிலையம் எடுத்தல் தொடர்பாக நூற்றுக்கு மேற்பட்ட நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றில் காணியின் நீள, அகலத்தைக் கொணடு எல்லைப்படுத்தி வீட்டுக்கு நிலையம் எடுத்தல் வேண்டும் எனக் கூறுகின்றது. வீட்டின் நீள, அகலம், ஒவ்வொரு அறைகளின் நீள அகலம் என்பவற்றை முறைப்படி கணக்கிட்டு நிலையம் எடுத்தல் வேண்டும் என்ற அளவுத் திட்டத்தைத் தெறிவுபடுத்துகிறது. பொதுவாக வீடுகள் கிழக்கு வாசல் வைத்து அமைக்கப்படுவதே உத்தமமாகும். ஆச்சாரமாக நடப்பவர்கள் வடக்கு வாசல் வைத்து அமைக்கலாம். செவ்வாய் தோசம் உள்ளவர்கள் தெற்கு வாசல் வைத்து அமைக்கலாம். மேற்கு வாசல் வைத்து அமைப்பது மத்திமமாகும். வீட்டுக்குள்ளே அக்கினி மூலையில் (தென்கிழக்கு) சமையலறையும் நிருதி மூலையில்(தென்மேற்கு) பிரதான படுக்கை அறையும், வாயு மூலையில்(வடமேற்கு) மலசல கூடம், குழியல் அறையும், ஈசான மூலையில் (வடகிழக்கு) ஆச்சாரமான, பக்குவமான அல்லது வழிபாட்டு அறை, நூலகம் அமைந்திருத்தல் உத்தமமாகும். இதனை மாற்றி அமைப்பது வீட்டில் பல பிரச்சினைகள் தோன்றுவதற்கு வழிவகுக்கும் என்கிறது சாத்திர நூல்கள். பூசை அறை வீட்டின் அமைப்பு, பிரதான வாசல் என்பவற்றைக் கருத்தில் கொண்டு அமைக்கப்படலாம். இதற்கும் விதி இருக்கிறது.

பொதுவாக நிலத்தில் மின்காந்த அலை அழுத்தம் (Electro Magnetic Poss. Radiation) காணப்படுகிறது. இந்த மின் காநத அலை அமுத்தம் நேரானதாக அல்லது சாதகமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே வாஸ்து அடிப்படையில் கணிப்பிட்டு வீட்டு நிலையம் எடுக்கப்படுகின்றது. இதன் அழுத்தம் எதிர்மறையாக இருந்தால் வீட்டில் உள்ளோருக்குப் பாதிப்பை ஏற்படுத்தி விடும். வாஸ்த்து நாத்திரத்தினை மின்காந்த அலை அழுத்தம் என்ற பெயரில் உலக நாடுகளில் உள்ள பல பல்கலைக் கழகங்களில் குடிசார் பொறியியல், கட்டிட வரை கலைஞர் ஆகிய பல துறைகளுக்குப் பாடமாகக் கற்பிக்கப்படுகிறது.

வீட்டு நிலையம் எதுக்கும் போது கிணறு, பிரதான வாசல் கதவு (Gate) எத்திசையில் உவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றியெல்லாம் நூல்கள் தெளிவாகக் கூறுகின்றன. இதனைச் சாத்திரிமாரும் ஐயர்மார் பலரும் குழப்பி இருக்கின்றனர். நம் முன்னோர் வீடமைக்கும் போது மலசலகூடம், சமையலறை ஆகியவற்றை வீட்டுக்கு வெளியே அமைத்தனர். நிலையம் எடுத்தல் தொடர்பான தெளிவில்லாமல் அமைப்பு முறை கவனிக்கப்படாமல் வீட்டை அமைத்து நன்கு வாழ்ந்திருக்கின்றனர். இப்போது கட்டப்படும் வீட்டுக்குள்ளேயே சமையலறை, மலசலகூடம் ஆகியன அமையப்படுவதனால் சகலவற்றையும் பார்த்து அமைக்கப்பட வேண்டியது சம்பிரதாயமாகிறது. மக்களின் அறியாதையைப் பயன்படுத்தி நிலையம் எடுப்பவர்களில் பலர் அமைப்பு முறையை மாற்றி நிலையம் எடுத்துக் கொடுத்திருக்கின்றனர். இவ்வாறு நமது அறியாமை, தெறிவின்மை ஆகியவற்றை மூலதனமாகப் பயன்படுத்திப் பலர் பணம் சம்பாதிக்கின்றனர்.

ஆகவே, நம் முன்னோர் உருவாக்கிய மரபுகள், சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்கள் என்பவற்றைப் பின்பற்றுவதும் நாம்தான். அவற்றுள் காணப்படும் போலிகள் மூடநம்பிக்கைகள், பிற்போக்கான விடயங்கள் என்பவற்றைக் கண்டறிந்து அதற்கேற்ப அவற்றைப் புத்திசாதுரியமாக மாற்றி அமைப்பதும் நாமாக இருத்தல் வேண்டும். அதுவே நடைமுறைச் சாத்தியமுமாகும்.

நமது வாழ்வியல் அம்சங்களைப் போலிகள் நீக்கி
உண்மை அறிந்த தெளிவுடன் பின்பற்றுவோம

தெளிவூட்டல் தொடரும்..

# 7 நிமிடங்களில் 400 மீற்றர் தூரம் தாடியால் ஊர்தி இழுத்து 59 வயது நபர் உலக சாதனை




(த.சுபேசன்)

7நிமிடம் 48செக்கன்களில் 1550கிலோ எடை கொண்ட ஊர்தியை 400மீற்றர் தூரம் தாடியால் இழுத்து தென்மராட்சி மட்டுவிலைச் சேர்ந்த 59வயதான செ.திருச்செல்வம் உலக சாதனை படைத்துள்ளார்.

சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் ஏற்பாட்டில் 09/07 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தென்மராட்சி-மட்டுவில் பகுதியில் இடம்பெற்ற உலக சாதனை நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழிலதிபர் அ.கிருபாகரன் கலந்து சாதனை நிகழ்வினை ஆரம்பித்து வைத்திருந்தார்.

மேலும் நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக சமூக சேவகர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசாமி,ஈ.சிற்றி ஆங்கில கல்லூரியைச் சேர்ந்த றஜீபன் ஆகியோரும், மேலும் கௌரவ விருந்தினர்களாக பன்னாட்டு எம்.ஜி.ஆர் பேரவைத்தலைவர் ம.விஜயகாந்த்,முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் தி.தங்கவேலு,ஊடகவியலாளர் முகுந்தன் ,சாதனையாளரின் நண்பன் தையிட்டி இ.சிவானந்தம் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

மேலும் சோழன் உலக சாதனை புத்தக நிறுவன இலங்கை கிளை தலைவர் யோ.யூட் நிமலன்,சந்திரபுரம் கிராம அலுவலர் சுபாசன் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

# கிழக்கு மாகாண காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளராக மீண்டும் விமரலராஜ் பதவி ஏற்பு

(கனகராசா சரவணன்)



கிழக்கு மாகாண காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளராக மீண்டும் பெறுப்பேற்றுள்ள எனக்கு பல அச்சுறுத்தல் மத்தியில்; எனது கடமையை ஏற்றுக் கொண்டுள்ளேன் இருந்தபோதும் சிலர் அரசியல் லாபங்களுக்காக என் மீது வீன்பழி சுமத்தியவர்களுக்கு இன்றைய நாள் ஒரு பதிலடியான நாள் என கிழக்கு மாகாண காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளராக மீண்டும் பதவியேற்றுள்ள விமரலராஜ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கச்சேரியில் அமைந்துள்ள கிழக்கு மாகாண காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளராக கடமையாற்றிய விமராஸ் மித பல்வேறு குற்றச்சாட்டுகள் காரணமாக அவரை கடமையில் இருந்து இடைநிறுத்தப்பட்ட நிலையில் அவர் அதற்கு எதிராக மேல் முறையீட்டு நீதிமன்றில் வழக்கு தொடர்ந்து நிலையில் அவர் குறற்றமற்றவர் என நிரூபிக்கப்பட்டு மீண்டும் பதவியை வழங்குமாற நிதிமன்ற உத்தரவிட்டது.

இதற்கமைய தனது கடமையை நேற்று திங்கட்கிழமை (10) சம்பீராய பூர்வமாக கடமையை பெறுப் பேற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 12 வருடங்களக்கு மேலாக காணி சீர்திருத்து ஆணைக்குழுவின் பணிபாளராக திருகோணமலை ,முல்லைத்தீவு, கிளிநொச்சி ,மட்டக்களப்பு ,யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் பணியாற்றியுள்ளேன் எனக்கு வழங்கப்பட்ட கடமையை சரியாக இதுவரை செய்துள்ளேன் இருந்தபோதும் பல சொல்லோன துயரங்களை சந்தித்தேன்.

இருந்த போதும் என்கு எதிராக போலியான் பல குற்றச்சாட்டுக்களை சில அரசியல்வாதிகள் தங்களது வரபிரசாரத்தை பயன்படுத்து குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர் இவைகள் அனைத்தும் ஒரு பொய்யான குற்றச்சாட்டுக்கள்.

காணிக்கு உறுதி வழங்குவது காணி சட்டங்களை நடைமுறைப்படுத்துவது காணி சீர்திருத்த ஆணைக்குழு அதற்கான ஒரு சட்ட ஆலோசனை பிரிவு உள்ளதுடன் கள உத்தியோகத்தரிடம் தொடங்கி அமைச்சர் வரைக்கும் உள்ள அனைவரது கையொப்பத்துடன் தான் உறுதி வழங்கப்படும்

ஊடகவியலாளர் மட்டுமல்ல தனி நபருக்கு எந்த ஒரு காணிவழங்க முடியாது காணி வழங்குவதற்கான சட்டம் இருக்கின்றது அந்த வகையில் தமிழ் ஊடகவியலாளர் சங்கம் அரசாங்க அதிபரிடம் தங்களது கோரிக்கையை விடுத்திருந்தனர்.

இந்த கோரிக்கையையடுத்து அரசாங்க அதிபர் விசேடமாக ஊடகவியலாள்களுக்கு காணி வழங்குமாறு என்னிடம் கோரிக்கை விடுத்திருந்தார். அதனையடுத்து முறையாக காணி கச்சேரி வைத்து அதனை தலைமை காரியாலயத்துக்கு அனுப்பப்பட்டு அங்கு சிபார்சு செய்யப்பட்டு அதனடிப்படையில் காணிகளை ஊடகவியலாளர்களுக்கு வழங்கினோம்

அதில் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் முனைப்பாக செய்பட்டு வழங்கப்பட்டது இதனை சில அரசியல்வாதிகள் ஊடகவியாலாளர்களுக்கு எந்தவகையில் காணி வழங்கப்பட்டது என தெரிவித்த குற்றச்சாட்டு முழுமையாக பொய்யானது அதேவேளை வேறு எந்தவொரு ஊடகவியலாளர்களோ சங்கங்களோ காணி தருமாறு கேட்கவில்லை

எனக்கு எதிராக அரசியல் வாதிகள் முற்று முழுதாக பயன்படுத்தப்பட்டது எனக்கு எந்த இடத்தில் வீன்பழி சுமத்தி எனது சேவையை இடைநிறுத்தி முடிவுக்கு கொண்டுவந்து அனுப்பினார்களே அந்த இடத்தில் சேவையாற்ற வேண்டும் என மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு அந்த வழக்கில் சாதகமாக என்னு தீர்பளித்து அதற்கமைய மீண்டும் பதவியை பெறுப்பேற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்

# கிழக்கு பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீட வளாகத்தில் CO-OP Fresh திறந்துவைப்பு!!




(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கிழக்கு பல்கலைக்கழகத்தின் பிள்ளையாரடியில் அமைந்துள்ள சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீட வளாகத்தில் CO-OP Fr-esh பல்பொருள் விற்பனை நிலையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட மட்டக்களப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் தேசகீர்த்தி நா.சசிகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான என்.சிவலிங்கம், கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வீ.கனகசிங்கம், பிரதி உபவேந்தர் பேராசிரியர் கே.ஈ.கருணாகரன், கிழக்கு பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி ரீ.சதானந்தன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்த நிகழ்விற்கு சிறப்பு அதிதிகளாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.வீ.தங்கவேல் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகத்தின் பதிவாளர் ஏ.பகீரதன் ஆகியோர் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்துள்ளனர்.

அதிதிகளுக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீட வளாகத்தில் CO-OP Fr-esh பல்பொருள் விற்பனை நிலையம் அதிதிகளினால் நாடா வெட்டி உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீட வளாகத்தில் குறித்த CO-OP Fr-esh பல்பொருள் விற்பனை நிலையம் திறந்துவைக்கப்பட்டமையினால் இங்கு கல்வி பயிலும் ஆயிரக்கணக்கான மாணவர்கள்பயன்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட செயற்குழுக் கூட்டம்




(சுமன்)

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட செயற்குழுக் கூட்டம் இன்றைய தினம் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ் தலைமையின் கட்சியின் மாவட்ட தலைமைச் செயலகத்தில் இடம் பெற்றது.

இக்கூட்டத்தில் கட்சியின் தலைவர் எஸ்.நவேந்திரா, செயலாளர் ஐ.கதிர், கொள்கைப் பரப்புச் செயலாளர் சாந்தன், மாவட்ட இணைப்பாளர் சுதா மற்றும் தீபன், மகளிர் அணியினர் உள்ளிட்ட கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது கட்சியின் கடந்த காலச் செயற்பாடுகள், ஜனநாயக ரீதியில் செயறபடும் போராளிகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள், கட்சிக் கட்டமைப்பு விடயங்கள், எதிர்காலச் செயற்திட்டங்கள், போராளிகளுக்கான வாழ்வாதார ஊக்குவிப்புகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை கட்சி உறுப்பினர்களின் பல்வேறுபட்ட கருத்தாடல்களுக்கு தலைவர், செயலாளர் உள்ளிட்டவர்களால் விளக்கங்கள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



# சுற்றுலாத் துறையில் நிலாவேளி புறாத் தீவு வரையான முறையற்ற படகு சேவை அனுமதியை நிறுத்த கோரி ஆர்ப்பாட்டம்

(ஹஸ்பர்)

திருகோணமலை நிலாவெளி கடற்கரை பகுதியில் சுற்றுலாத் துறையாளர்களுக்கான புறாத் தீவு படகு சேவை இடம்பெற்று வரும் நிலையில் முறையற்ற அனுமதி பத்திரம் பெற்று படகு சேவையில் ஈடுபடுவோரை நிறுத்த கோரிய கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இன்று (10)நிலாவெளி கடற்கரை பகுதியில் இடம் பெற்றது.

குறித்த ஆர்ப்பாட்டத்தினை நிலாவெளி உல்லாச பிரயாணிகளின் படகு மற்றும் சேவை கூட்டுறவு சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. பல வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.தங்களது சங்கம் ஊடாக அனுமதி பெற்று சுழற்சி முறையில் முறையாக தொழிலை சுமார் 15 வருடங்களுக்கு மேலாக மூவினங்களை சேர்ந்த நாங்கள் செய்து வருகிறோம் ஆனால் முன்னால் வனஜீவராசி திணைக்கள




அதிகாரி ஒருவர் முறையற்ற விதத்தில் வேறொருவரின் பெயரில் அனுமதி பத்திரத்தை வைத்து படகு சேவையில் ஈடுபடுகிறார் இதனால் தங்களது தொழில் பாதிக்கப்படுகிறது இதனை உடனடியாக நிறுத்த வேண்டும் எங்களது சங்கத்தில் பலர் இந்த தொழிலை நம்பியே தினத் தொழில் இன்றி சுழற்சி முறையில் ஈடுபடுகிறோம் ஆனால் குறித்த முறையற்ற அனுமதி பெற்ற நபரின் படகு புறா தீவுக்கு தினமும் சேவையில் ஈடுபடுகின்றன. வாழ்வாதாரம் இழக்கும் நிலையில் இருக்கிறோம் இது தொடர்பில் உரிய அதிகாரிகளிடத்தில் பல முறை முறையிட்டும் கோரிக்கைக்கான தீர்வு கிடைக்கப்பெறவில்லை இனியாவது நிரந்தர தீர்வினை உரிய அதிகாரிகள் பெற்றுத் தர வேண்டும் என கவனயீர்ப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.இதில் குறித்த சங்கத்தினை சேர்ந்த பலர் ஈடுபட்டனர்

# மாவடியில் சிறப்பான சங்காபிஷேகம்




வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு மாவடி கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த சங்காபிஷேகம் பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் நேற்று(10) திங்கட்கிழமை நடைபெற்ற போது.

படங்கள் .
வி.ரி. சகாதேவராஜா

# மிகவும் வேகமாக சீரழிந்து செல்லும் இன்றைய இளைய சமூகத்தை பாதுகாக்கும் நோக்கில்

அறநெறிப் பாடசாலைகளையும் ஆலயத்தின் செயற்பாடுகளையும் ஒழுங்குபடுத்தும் நோக்கில், தெல்லிப்பளை பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த விசேட கூட்டத்தில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் ஆற்றிய உரையின் முழு வடிவம்.

சமீப காலத்தில் சைவக் கோவில்களில் ஏற்பட்டுள்ள மிக முக்கியமான பிரச்சினை ஒரு கோவிலிலும் தற்பொழுது பிரசங்கம் கிடையாது சைவ நற்சிந்தனை கிடையாது என்பதே ஆகும்.

எல்லா கோவில்களிலும் கட்டிட வேலைகள் நடக்கின்றன ஆனால் ஆலய நிர்வாகத்தில் இருப்பவர்களுக்கு கூட ஆலயத்தின் பல மகத்துவங்கள் பற்றி தெளிவாக தெரிவதில்லை. எந்த விக்கிரகம் எதற்காக வைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலயத்தின் சரியான முகூர்த்தங்கள் என்ன?

மற்றும் புராண இதிகாசங்களின் மகிமை என்ன? விரதங்களின் மகிமை என்ன? என்று சொல்லக் கூடிய தகுதி ஆலய நிர்வாகிகளுக்கு கூட அற்ற அவலம் தற்காலத்தில் நிலவுகின்றது.

எனது முதலாவது அறிவுரை உங்கள் ஆலயம் சிறிதாக இருக்கலாம் பெரிதாக இருக்கலாம் உங்கள் ஆலயத்தினை சுற்றி இருக்கின்றவர்களை அழைத்து அது வெறும் 10 நபர்களாக இருந்தாலும் உங்கள் ஊரில் உள்ள ஒரு ஆசிரியரை அழைத்து ஒரு சிறிய நற்சிந்தனையை ஏற்பாடு செய்யுங்கள்.

இதனை ஆலய அறங்காவலர்கள் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். அறிவுரைகளை செவி வழியாக கேட்டு செவி வழியாக விட்டு விட்டு செல்லாமல் இதனை கட்டாயமாக நடைமுறைப் படுத்துங்கள்.

உங்களுக்கு தெரியும் முன்பு சிறிய ஆலயமாக இருந்தாலும் வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறுவதும் அந்த ஊரில் உள்ள பெரியவர் கொஞ்ச நல்ல விடையங்களை சொல்லுவதும் பெரிய ஆலயங்களில் பிரசங்கத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் வழக்கம் இருந்தது.

தற்காலத்தில் ஆலய சிவாச்சாரியார்கள் பிரசங்கம் வைக்க வேண்டாம் எங்களுக்கு நேரம் இல்லை என்று சொல்லும் அவலம் நிகழ்கின்றது.

ஆலய கும்பாபிஷேக பத்திரிகையில் கூட ஒலிபெருக்கி கட்டுறவனின் பெயர் கூட இடம்பெறுகின்றது பிரசங்கத்திற்கு இடமே இல்லாமல் போய்விட்டது.

இந்த நடைமுறைகள் எல்லாம் சமீப காலமாக ஆலயங்களில் நடக்கின்ற அவலமாக உள்ளது. பழைய காலத்தில் உள்ள கும்பாபிஷேக பத்திரிகையை எடுத்துப் பாருங்கள் என்ன மாதிரி இருக்கின்றது தற்காலத்தில் என்ன மாதிரி இருக்கின்றது என.

அறங்காவலர்களே உங்களுக்கு ஒரு நட்டமும் இல்லை வெள்ளிக்கிழமைகளில் ஒரு கொத்து அரிசி போட்டு ஆலயத்தை சுற்றி இருக்கின்ற சிறுவர்களை அழைத்து ஒரு சின்ன கூட்டுப் பிரார்த்தனை நடத்துங்கள் ஆகக் குறைந்தது சிவபுராணம் பாட வையுங்கள்.

இதை நீங்கள் செய்யாமல் ஆலயத்தை பூட்டி நீங்கள் திறப்பு எடுக்கிறதால எந்த நன்மையும் இந்த சமூகத்திற்கு கிடைக்கப்பேவதில்லை.

அறங்காவலர்களும் நிர்வாகிகளும் ஆலயங்களுக்கு நிறைய பூட்டுகளை வாங்கி பூட்டி அதன் திறப்புக்களை இடுப்பில் கொண்டு திரிகின்றார்களே அல்லாமல் சமயத்தை வளர்க்கவில்லை.

அதிலும் திறப்பை யார் வைத்திருக்கின்றது என சண்டை போட்டுக் கொண்டு திரிகின்றார்கள்.

ஒரு காலத்தில் ஆலயங்கள் அனைத்தும் அகலத் திறந்திருந்த ஆலயங்கள் இன்று பூட்டு போட்டு பூட்டி வைத்துள்ளார்கள். தற்போது தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயத்தை அதிகாலை தொடக்கம் மாலை வரை திறந்து வைத்திருக்கின்றோம்.

எந்த அடியவரும் அதிகாலை 5.30 மணி தொடக்கம் மாலை 6.30 மணி வரை சுற்றிக் கும்பிட முடியும். பக்கதர்களுக்குதான் ஆலயமே தவிர நிர்வாகிகளுக்கு அல்ல.

ஆனால் பலர் வைத்தியரை சந்திக்கும் நேரம் போல நேர அட்டவனை வைத்துள்ளார்கள் காலையில் சாமிக்கு பூட்டு மதியம் சாமிக்கு பூட்டு என ஆலயத்தை பூட்டு போட்டே வைத்துள்ளார்கள்.

உங்கள் ஊரியில் உள்ள ஓய்வூதியர்களை அழைத்து கால நேரங்களுக்கு ஏற்ப ஆலயங்களை முழுமையாக திறந்து வைத்திருங்கள்.

பல வெளிநாட்டில் இருந்து வரும் மக்கள் தெரிவிக்கும் குற்றச் சாட்டு தற்காலத்தில் எல்லா கோவில்களும் பூட்டி இருக்கின்றது. ஒரு அர்ச்சனை செய்வம் என்று போனால் பூட்டி இருக்கின்றது ஆலயங்கள்.

தற்காலத்தில் மனிதன் மிக வேகமாக இயங்குகின்றான் அவனுக்கு நேரம் கிடைக்கும் பொழுது எல்லாம் வந்து சாமியை வணங்குவான் எனவே ஆலயங்களை பூட்டு போட்டு பூட்ட வேண்டாம்.

அடுத்து எனது அறிவுரை ஆலயங்களை சுத்தமாக வைத்திருங்கள். சிவத்தமிழ் செல்வி அவர்கள் அமைத்த பெண்கள் தொண்டர் சபையினர் எமது ஆலயத்தின் ஒவ்வொரு பூசைப் பொருட்களையும் நன்றாக சுத்தம் செய்து வைப்பார்கள்.

ஒவ்வொரு செய்வாய்க்கிழமை பூசைக்கு முன்பதாக அனைத்து ஆலய பூசைப் பொருட்களும் நன்றாக பளபளவென மினுங்கும்.

தற்காலத்தில் பல ஆலயங்களில் பார்த்துள்ளேன் கடவுளுக்கு காட்டுகின்ற தீபத்தில் உள்ள அழுக்குகளை பார்த்தால் இதை ஏன் இறைவனுக்கு காட்ட வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகின்றது அந்தளவிற்கு சக்கு பிடித்துபோய் உள்ளது.

இறைவுக்கு காட்டுகின்ற தீபத்தை கூட மினுக்குவதற்கு நிர்வாகத்தால் முடியவில்லை என்றால் எதற்காக ஆலயங்கள்?

தயவு செய்து ஆலய நிர்வாகத்தில் இருப்பவர்கள் ஆலய பூசைப் பொருட்களை சுத்தப்படுத்த உங்கள் ஊரில் உள்ள 5 பெண்களை ஏற்பாடு செய்யுங்கள்.

நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்து பாடி

முன்பு ஆலயங்கள் எல்லாம் அழகாக சுத்தமாக



**பல ஆலயங்கள் வான வேடிக்கைக்கும் ஆடம்பரத்திற்கும் பல இலட்சங்களை செலவு செய்கின்றார்கள் ஆனால் நாங்கள் துர்க்கை அம்மன் ஆலயத்தில் அந்த நிதியை அன்னதானத்திற்கு செலவு செய்கின்றோம். உங்கள் ஊரில் உள்ள ஆகக்குறைந்து 10 பிள்ளைகளை தன்னும் உங்கள் ஆலயத்திற்கு அழைத்து தேவாரம் பாடச் சொல்லுங்கோ ஆலயங்கள் திருத்தினால் நமது சமூகம் தானாக திருந்தும். சிலர் சுப்பிர பாதத்தை ஒலி பெருக்கியில் ஒலிக்க விட்டு அவர்கள் தங்கள் பாட்டினைப் பார்க்கின்றார்கள் இதனனால் யாருக்கு என்ன நன்மை? ஆலயங்களில் நிர்வாக பதவிகளுக்காக சண்டை பிடித்து எவருக்கும் ஒரு பயனும் இல்லை. நான் பல ஆலயங்களில் பொறுப்பு வகிக்கின்றேன் என்னிடம் ஒரு திறப்பும் இல்லை. ஆனால் அவை அனைத்தும் மிகவும் சிறப்பாக இயங்குகின்றது.**



மெழுகினார்கள் ஆனால் தற்காலத்தில் எல்லாம் சிமெந்து ஆகிவிட்டது ஆனால் சுத்மில்லை.

சமீபத்தில் வெளிநாட்டில் இருந்து வருகை தந்த சிறுவன் ஒருவன் ஒரு ஆலயத்தில் பிரசாதம் கொண்டு வந்த பாத்திரத்தில் உள்ள அழுக்குகளை பார்த்து ஈடிணுணுது என்று பேசுகின்றான்.

பிரசாதம் என்பது பிரம்மத்திற்குரிய சாதம் அது எந்தளவு சுத்தமாக வைத்திருக்க வேண்டும் அதனை கூட கவனிக்காமல் ஆலயம் நடத்துகின்றார்கள் சிலர்.

அடுத்து ஆலய அறங்காவலர்கள் மற்றும் நிர்வாகிகள் மிக முக்கியமாக மேற்கொள்ள வேண்டிய விடையம் ஆலய சுற்றாடல்களில் இருக்கும் மக்களை நேசிக்க வேண்டும்.

உங்கள் ஆலயத்திற்கு அருகில் உள்ள ஒரு மாணவன் தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்தி பெற்றால் உங்கள் ஆலயத்தால் ஒரு கொப்பி ஒரு பேனாவை பாராட்டி பரிசாக கொடுத்தால் அந்தப் பிள்ளைக்கு ஆலயத்தில் ஒரு பற்று வரும்.

மக்களிடம் பணம் வாங்கி வாங்கி வங்கிகளில் நிரப்ப வேண்டாம். நான் தலைவராக இருக்கும் போது போட்ட பணத்தை அடுத்த தலைவர் வந்து எடுத்து செலவு செய்து விட்டார் என சண்டை போட வேண்டாம்.

வங்கிகளில் நிரப்புவதற்கல்ல பணம். ஏழைகளுக்கு கொடுக்க வேண்டும் ஆலயத்தின் பெயரால் நல்ல பல கருமங்களை ஆற்ற வேண்டும்.

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் வாரத்தின் இரு நாட்கள் அன்னதானம் வழங்குகின்றோம் பல அன்பர்கள் எமது பணிகளை பார்த்து தாமாகவே முன்வந்து பல உதவிகளை செய்கின்றார்கள்.

நல்லவற்றை செய்ய ஆரம்பித்தால் மக்கள் தமாக முன்வந்து உதவி செய்வார்கள்.

ஒரே நாளில் கும்பாபிஷேகத்திற்காக கோடிக் கணக்கில் பணத்தை செலவு செய்து விட்டு மறுநாள் சாமியையும் மக்களையும் பட்டினி போட வேண்டாம். சரியாக திட்டமிட்டு நல்லவற்றை செய்யுங்கள்.

அடுத்தது ஆலங்கள் ஊடாக அறநெறி பாடசாலைகளை நடத்துங்கள் இந்து காலாசார திணைக்களம் அறநெறி பாடசாலைகளை ஊக்குவிக்க பல திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.

அதனை விட மேலதிக உதவிகள் உங்களுக்கு தேவைப்பட்டால் நீங்கள் சிறப்பாக செயல்படுவதாக பிரதேச செயலாளர் சிபார்சு செய்தால் நாங்கள் துர்க்காதேவி ஆலயத்தால் பல உதவிகளை வழங்க தயாராக உள்ளோம்.

ஒவ்வொரு ஆலயத்தாலும் அறநெறி பாடசாலைகளை நடாத்தும்போது அந்த மாணவர்களே அந்த ஆலயத்தின் அறப் பணிகளை மேற்கொள்வார்கள்.

ஒரு ஆலயத்தால் அகக் குறைந்தது 5 பிள்ளைகளை தன்னும் வளப்படுத்த முடியவில்லை என்றால் அந்தக் கோவிலை நடாத்துவதால் எந்தப் பயனும் இல்லை.

அடுத்து மிக முக்கியமான விடையம் ஆலயப் பொருட்களுக்கான பொருட் பதிவேட்டினை சிறப்பாக பராமரிப்பது.

ஒவ்வொரு ஆலயத்திலும் உள்ள சொத்துக்களையும் வருமானங்களையும் செலவுகளையும் மிகவும் முறைப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் அதனை மேற்கொண்டால் அந்த ஆலயத்தின் மீது ஒரு நம்பிக்கை மக்கள் மத்தியில் ஏற்படும்.

வலி வடக்கில் சில ஆலயங்களில் உள்ள பொருட்கள் களவு போன பின்பு பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

அவ்வாறு களவு போல பல சாமி விக்கிரகங்கள் கொழும்பில் இருப்பதாக சொன்ன போது துர்க்கா தேவி தேவஸ்தானத்தால் 65,000 ரூபா செலவு செய்து அவற்றை இங்கு கொண்டு வந்து

களவு போன உங்கள் விக்கிரகங்களின் அளவு மற்றும் விபரங்களை சொல்லுங்கோ என கேட்டால் அறங்காவலருக்கும் நிர்வாக உறுப்பினர்களும் பதில் சொல்ல முடியாத வகையில் நிற்கின்றார்கள்.

அவர்களுக்கு அவர்களின் ஆலயங்களில் உள்ள பொருட்கள் பற்றி விபரங்கள் சரியாக தெரியாது.

எனவே ஆலயங்களில் உள்ள ஒவ்வொரு பொருட்கள்பற்றியும் விரிவானதகவல்களை எடுத்து அவற்றை ஒவ்வொரு வருடமும் மேற்பார்வை செய்ய வேண்டும்.

உங்கள் ஆலயங்களில் உள்ள நகைகளின் விபரங்கள் என்ன என்று கேட்டால் தெரியாது என்று சொல்லுகின்றார்கள் ஆலய நிர்வாகிகள்.

பல ஆலயங்கள் வான வேடிக்கைக்கும் ஆடம்பரத்திற்கும் பல இலட்சங்களை செலவு செய்கின்றார்கள் ஆனால் நாங்கள் துர்க்கை அம்மன் ஆலயத்தில் அந்த நிதியை அன்னதானத்திற்கு செலவு செய்கின்றோம்.

உங்கள் ஊரில் உள்ள ஆகக்குறைந்து 10 பிள்ளைகளை தன்னும் உங்கள் ஆலயத்திற்கு அழைத்து தேவாரம் பாடச் சொல்லுங்கோ ஆலயங்கள் திருத்தினால் நமது சமூகம் தானாக திருந்தும்.

சிலர் சுப்பிர பாதத்தை ஒலி பெருக்கியில் ஒலிக்க விட்டு அவர்கள் தங்கள் பாட்டினைப் பார்க்கின்றார்கள் இதனனால் யாருக்கு என்ன நன்மை?

ஆலயங்களில் நிர்வாக பதவிகளுக்காக சண்டை பிடித்து எவருக்கும் ஒரு பயனும் இல்லை. நான் பல ஆலயங்களில் பொறுப்பு வகிக்கின்றேன் என்னிடம் ஒரு திறப்பும் இல்லை. ஆனால் அவை அனைத்தும் மிகவும் சிறப்பாக இயங்குகின்றது.

மற்றவர்கள் மீதும் நம்பிக்கை வையுங்கள் கடமைகளையும் பொறுப்புக்களையும் பிறரிடமும் ஒப்படையுங்கள் அதைவிடுத்து எல்லா திறப்புக்களையும் நானே கொண்டு திரிவன் என நினைத்தால் ஒன்றும் நடக்காது.

அடுத்தது சகல ஆலயங்களிலும் ஒரு அலுமரியைப் பாதுகாத்து திருமுறைப் புத்தகங்களை பாதுகாத்து வைத்துக் கொள்ளுங்கள். ஆலய கும்பாபிஷேக மலர்கள் மற்றும் ஆன்மீக புத்தகங்களை முறைப்படி பாதுகாத்து வைத்துக் கொள்ளுங்கள்.

நாங்கள் பெரிய ஆலயங்களுக்கு சென்று உங்களிடம் ஏதாவது புத்தகங்கள் இருக்குதா என கேட்டால் திருவம்பா புத்தகம்தான் உங்க செருகி வைத்தனாங்கள் என பொறுப்பற்ற வகையில் பதில் சொல்கின்றார்கள் வேறு புத்தங்கள் ஒன்றுமில்லை.

10 கும்பாபிஷேசங்கள் நடத்தியிருப்பார்கள் ஆனால் ஒரு கும்பாபிஷேக மலர் கூட ஆலயங்களில் இருக்காது.

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தால் திருமுறை புத்தகங்களை அச்சிட்டு ஆலயங்களுக்கு இலவசமாக வழங்கினோம் ஆனால் இன்று அந்த நூல்கள் எங்கே வைத்துள்ளீர்கள் என கேட்டால் தெரியாது என பதில் சொல்கின்றார்கள்.

21ம் நூற்றாண்டில் இந் சமூகத்தை ஏமாற்றாமல் சமூகத்திற்கு நன்மையினை செய்ய பழகிக் கொள்ளுங்கள்.

தற்காலத்தில் பல ஆலயங்கள் எங்களின் அடிப்படை மரபுகளை மறந்து விட்டார்கள். ஆலய உற்சவங்களின் போது மாவிலைத் தோரணங்களை காண தற்காலத்தில் முடிவதில்லை.

அண்மையில் பல கோடிகளை செலவு செய்து நடந்த கும்பாபிஷேசகத்திற்கு சென்ற போது அங்கு மாவிலைத் தோரணங்களை காண முடியவில்லை.

புதுவருடம், தீபாவளி, தைப்பொங்கல் என எதற்கும் மாவிலை தோரணம் இல்லை என்றால் எதற்கு கோவில்? மாவிலை தோரணத்திற்கு அர்தமே மங்களம் உண்டாகும் என்பதாகும். மரபுகளை மறந்து ஆலயங்களை நடத்தாமல் மரபுகளுடன் அதனை நல்ல சமூக நிறுவனமாக நடத்துங்கள்.

தற்காலத்தில் பல ஆலயங்களில் மங்களமே இல்லை வெறும் சண்டைகளாகவே உள்ளது.

எனக்கு உள்ள மிகப் பெரிய கவலை என்னவென்றால் நாங்கள் பல மரபுகளையும் அடிப்படைகளையும் தொலைத்து விட்டோம்.

கட்டுவன் பாலர் ஞானோதய சபை 1923ம் ஆண்டு நடாத்திய நிகழ்ச்சி பற்றிய தகவல்களை நான் இந்து சாதனத்தில் வாசித்தேன் உங்கள் ஆலயங்கள் பற்றிய வரலாற்றை நீங்கள் பாதுகாக்க வேண்டும் அவற்றை முறையான பேண வேண்டும்.

பாருங்கள் 1923ம் ஆண்டே பல சபைகளை உருவாக்கி பல தொண்டுகளை செய்து சமூகத்தை நல்வழிப்படுத்தியுள்ளார்கள் எம் முன்னோர்கள் ஆனால் 21ம் நூற்றாண்டில் கோவில்கள் யாவும் பூட்டில் கிடக்கின்றது.

தயவு செய்து ஆலயங்களை சார்ந்த அறங்காவலர்கள் மிகுந்த அக்கறை எடுத்து ஆலங்களை பாதுகாத்து கொள்ளுங்கள் ஆலயங்களை சுத்தமாக வைத்திருங்கள். சமூகத்தை நல்வழிப்படுத்தும் சமூக தொண்டு நிறுவனமாக செயல்படுங்கள். உங்களுக்கு எதாவது உதவி தேவை என்றால் நாங்கள் உதவி செய்ய எப்பொழுதும் தயாராகவே உள்ளோம்.